Registered as a news paper.

பக்கங்கள்: இருபத்திரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 கார்த்திகை- 12 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் 24 (27.11.2005) ஞாயிற்றுக்கிழமை இதழ் 59

# இன்று தமிழீழ மாவீரர் நாள்!

## தமிழர் தாயகம் எழுச்சிக்கோலம்




யாழ்ப்பாணம்


தமிழீழ மாவீரர் நாள் இன்று உணர்வெழுச்சியுடன் தமிழர் தாயகப் பிரதேசங்களிலும், புலம்பெயர் நாடுகளிலும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

முதல் மாவீரர் லெப். சங்கர் உயிர்நீத்த இந்த நாளில் - தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூரும் வகையில் தமிழீழ மாவீரர் நாளாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இன்றுமாலை 6.05 மணியளவில் தமிழர் தாயகப் பகுதியெங்கும் சமகாலத்தில் அனைத்து ஆலய, தேவாலய மணிகளும் ஒரு நிமிடநேரம் ஒலி எழுப்பப்படும். அதைத் தொடர்ந்து அனைத்து மக்களும் அகவணக்கம் செலுத்துவர்.

நினைவொலி எழுப்பப்படும்போது வீதியால் செல்வோர், பயணங்கள் மேற்கொள்வோர் அந்தந்த இடங்களில் நின்றவாறு அகவணக்கம் செலுத்துவர்.

தொடர்ந்து 6.07 மணிக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் எங்குமுள்ள 25 மாவீரர் துயிலுமில்லங்களிலும் மத்தியசுடரை விடுதலைப்புலிகள் அமைப்பின் முதன்மை உறுப்பினர்கள் ஏற்றுவர். (12 ஆம் பக்கம் பார்க்க)



# புலிகளின் அடுத்த கட்ட நகர்வு; தலைவரின் இன்றைய உரையில்!

## சர்வதேசம் எதிர்பார்த்து காத்திருப்பு

யாழ்ப்பாணம்

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு - தமிழீழத் தேசியத் தலைவர் இன்று நிகழ்த்தவுள்ள கொள்கைப் பிரகடன உரையை அனைத்துத் தரப்பினரும் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

வருடாந்தம் தனது மாவீரர்தின உரையில் - விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடுகள் தொடர்பாக விரிவாக உரைநிகழ்த்தி வரும் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் இந்த வருட உரையானது பலத்த எதிர்பார்ப்புக்களுக்குள்ளாகியுள்ளது.

இலங்கை அரசுடனான சமாதானம் தேக்கமடைந்த நிலையில் இருப்பது, போர்நிறுத்த உடன்பாடு நெருக்கடிக்குள்ளாகியிருப்பது, தென்னிலங்கையில் புதிய அரசியல் தலைமை பொறுப்பேற்றிருப்பது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தமிழர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்துறையில் சூடு; இளைஞர் ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணம்

ஊர்காவற்துறையில் நேற்றிரவு இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

ஊர்காவற்துறை - தம்பாட்டியைச் சேர்ந்த மார்க்கண்டு சசிகரன் (வயது

இரவு 7.30 மணியளவில் அந்த வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் இவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றதாக ஊர்காவற்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த

## முகாம்களை விட்டு வெளியேறுவதற்கு படையினருக்கு தடை!

கொழும்பு

மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில் - தமிழர் தாயகப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்றும்- இதனால் முகாம்களைவிட்டு படையினர் வெளியேறவேண்டாம் என்றும் படைத் தலை

## படைக் கட்டமைப்பில் மாற்றம்; ராணுவத் தளபதியும் வீட்டுக்கு!

கொழும்பு

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு புதிய தளபதியை நியமிக்கவும் - இராணுவ கட்டளை பீடத்தில் முக்கிய மாற்றங்களைச் செய்யவும் புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ள தாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவிற்கு பதிலாக புதிய இராணுவத் தளபதியொருவரை நியமிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த

யாழ்ப்பாணம்

ஊர்காவற்துறையில் நேற்றிரவு இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

ஊர்காவற்துறை - தம்பாட்டியைச் சேர்ந்த மார்க்கண்டு சசிகரன் (வயது 23) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மேற்படி நபர் ஊர்காவற்துறை பிரதேசசபைக்கு பின்னாலுள்ள தனது நண்பரின் வீட்டுக்கு நேற்றிரவு 7 மணியளவில் சென்று படம்பார்த்துக் கொண்டிருந்தார்.

இரவு 7.30 மணியளவில் அந்த வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் இவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றதாக ஊர்காவற்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சசிகரன் ஊர்காவற்துறை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும்போது வழியில் உயிரிழந்தார்.

இதன்பின்னர் சடலம் பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு பிரேதபரிசோதனையின் பின்னர் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு

மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில் - தமிழர் தாயகப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்றும்- இதனால் முகாம்களைவிட்டு படையினர் வெளியே வரவேண்டாம் என்றும் படைத்தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

எல்லைப்புற கிராமங்கள் மற்றும் பிற பிரதேசங்களிலுள்ள படையினர் விடுமுறையில் சென்றபின் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாமென்ற தகவல் கிடைத்துள்ளதால் அவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு புதிய தளபதியை நியமிக்கவும் - இராணுவ கட்டளை பீடத்தில் முக்கிய மாற்றங்களைச் செய்யவும் புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ள தாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவிற்கு பதிலாக புதிய இராணுவத் தளபதியொருவரை நியமிப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார். புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு வாய்ப்பிருப்பதாகத் தெரியவருகிறது.

எனினும், இராணுவத்தின் சிரேஷ்ட தளபதி வரிசையில் 4 ஆம் இடத்திலிருக்கும் மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சியை அடுத்த இரா ணுவத் தளபதி யாக்க வேண்டுமென்றும் கருத் துக்கள் நிலவுகின்றன.

புதிய ஜனாதிபதியின் கீழ் பாதுகாப்பு அமைச் சின் செயலாளராக நியமிக்கப்படவுள்ள ஜனாதிபதி மகிந்தவின் சகோதரரான கேணல் கோட்ட பாய ராஜபக்ஷவுடன் மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி இராணுவத்தில் ஒரேபிரிவில் பணியாற்றியவராவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வான் பாதுகாப்பு ராடர்கள் இரண்டை இலங்கைக்கு வழங்கியது இந்தியா!

கொழும்பு

இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் - முப்படைகளுக்கும் நவீன ஆயுத தளபாடங்களை வழங்க இந்தியா முன்வந்துள்ளதுடன் முதற்கட்டமாக வான்பாதுகாப்பு ராடர்கள் இரண்டை வழங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளின் விமான அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் 3டி ரக விமான பாதுகாப்பு ராடர்கருவிகள் இரண்டை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இவற்றைப் பொருத்துவதற்காக இந்திய விமானப்படை அதி காரிகள் குழுவொன்று விரைவில் இலங்கைக்கு வரவுள்ளதாக விமானப்படைத் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் விமான அச்சுறுத்தல் இலங்கைக்கு மாத்திரமல்லாது இந்தியாவின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலென இந்திய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலை வர் கேணல் ஹரிஹரனும் தெரிவித்திருந்தார்.

இதைத்தவிர அதிகாரம் எதுவுமின்றிச் செயற்படும் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு உரிய கட்டமைப்பைப் பெற்றுக்கொள்வது குறித்து இந்தியாவின் உதவியை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

(தே)

# கோலாகலமாக கொண்டாடப்பட்ட தேசியத் தலைவரின் பிறந்தநாள்!



யாழ்ப்பாணம்

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் 51 ஆவது பிறந்த நாளை தமிழர் தாயகம் எங்கும் வாழும் மக்கள் நேற்று குதூகலமாகக் கொண்டாடினர்.

ஆலயங்களில் விசேட பூசைகளை நடத்தியும், 51 பானைகள் வைத்துப் பொங்கல் செய்தும், இனிப்புப் பண்டங்களை வழங்கியும் மகிழ்ந்ததுடன் - பிரதான வீதிகள், பொது இடங்களில் பட்டாசு கொளுத்தியும் மகிந்தனர்.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் பிறந்த ஊரான வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. முன்னதாக வல்வெட்டித்துறை நெடியகாடு சந்தியிலிருந்து மாணவர்களின் பான்ட் வாத்தியம் இசைக்க வலி.வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தைச் சேர்ந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்

(M.B.B.S) எம்.பி.பி.எஸ். வைத்தியர்களினால் சகல மருத்துவ சேவைகளும் ஆய்வுகூட சேவைகளும் வழங்கப்படுகின்றன.

தொலைபேசி: 021-222 8144

173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(C/4385)

ஆலோசனை நேரம்:
திங்கள் - சனி காலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 முதல் - காலை 10.00 வரை
மாலை 5.00 முதல் - இரவு 9.00 வரை



# மாவீரர் நாள் நிகழ்வுகளும் பெற்றோர்கள் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் கல்லூரியில் விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவிடத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கல்லூரி மாணவன் எ.யோ.பேணாட் கொலின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை கல்லூரி அதிபர் ந. யோகராஜன், விரிவுரையாளர்களான ம. அலோசியஸ், க.பரமேஸ்வரன் ஆகியோரும் இவர்களைத் தொடர்ந்து அலுவலக உத்தியோகத்தர் திருமதி க.சதாதேவனும், மாணவர் ஒன்றியத் தலைவர் சி.கிருபா, ஊழியர் ம. செல்வராஜா, மாணவி ஜெ. வாணி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக் கொடியை மாவீரரது மகனும் கல்லூரியின் படவரைஞர் கற்கைநெறி மாணவனுமாகிய தி.பிறேம்நாத் ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரை விரிவுரையாளர்களான ம. ரவீந்திரன், க.வெற்றிவேல், ம.தியாகராஜா, க. சகாதேவன், க.சண்முகதாஸ் ஆகியோர் ஏற்றி வைத்தனர். திருவுருவப்படங்களுக்கு கல்லூரியின் அதிபர், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

விரிவுரையாளரான க.பரமேஸ்வரன், மாணவி ஜெ.வாணி நினைவுரைகளை ஆற்றினர். இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை 11 மணியளவில் கல்லூரி மாணவன் மு.பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் - பொதுச்சுடரை கல்லூரியின் அதிபர் ந.யோகராஜன், விரிவுரையாளர்களான ம.அலோசியஸ், ச.சண்முகதாஸ், திருமதி.ம.கதிர்காமநாதன், த.சாந்தகுமார் ஆகியோரும் - ஊழியரான அ.மதிவர்ணன், கல்லூரி மாணவனான த.சத்தியசீலன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை கல்லூரியின் மாணவன் தி.பிறேம்நாத் ஏற்றி வைத்தார்.

ஈகச்சுடரை விரிவுரையாளர்களான க.சகாதேவன், லலிதாதேவி, த.கதிர்காம நாதன் ஆகியோரும், அலுவலக உத்தியோகத்தரான த. தயானந்தன், மாணவர்களான சி. சதீஸ்வரன், ம.சிறீகரன், த.துஷ்யந்தினி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

கல்லூரிச் சமூகத்தினரின் மலர் வணக்கத்தைத் தொடர்ந்து, நினைவுரைகளை விரிவுரையாளர்களான த.சாந்தகுமார், லலிதா தேவி ஆகியோர் ஆற்றினர்.

இதேவேளை கல்லூரி மண்டபத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 51 ஆவது அகவையை முன்னிட்டு கல்லூரியின் அதிபர் உரை நிகழ்த்தினார். பின்னர் - கல்லூரி மாணவ, மாணவிகளினால் இரத்தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

நெல்லியடி

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நடத்திய மாவீரர்நாள் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - இந்த மாதம் 15 ஆம் திகதி வரை தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர் பற்றிய நினைவுரையை சங்கத்தின் உள்ளகக் கணக்காளர் சி.நேசராசா ஆற்றினார்.

முக்கிய இராணுவ முகாம் தகர்ப்பின் கரும்புலிகளின் பகுப்பும் மாவீரர்களின் விபரமும் என்ற தலைப்பில் முகாமையாளர் சா.தணிகாசலம்பதியும், தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் சிந்தனைத் துளிகள் என்ற பொருளில் கிளைமுகாமையாளர் மா.நடேச னும் உரை நிகழ்த்தினர்.

இந்தநிகழ்வில் - இயக்குநர் சபை உறுப்பினர் சி.வீரசிங்கம், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் க.ஆனந்தகுமாரசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

யாழ்ப்பாணம்

யாழ்.நல்லூர் பிரதேச வெண்மை வாணிபர் சங்கத்தினரால் மாவீரர் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வெண்மை வாணிபர் சங்கக் காரியால்த்தில் சங்கத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்றநிகழ்வில்-

மாவீரர்களின் பெற்றோர்கள் சுடர் ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்க சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களின் மௌனஅஞ்சலியுடன் வெண்மை வாணிப சங்க உறுப்பினர்கள் மாவீரர்களின் தாய்-தந்தையருக்கு மலர்மாலை அணிவித்து கௌரவித்ததுடன் அன்பளிப்புப் பொருட்களையும் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் தியாகங்களை நினைவுகூர்ந்து சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் உரையாற்றினர். (63)

கொக்குவில்

மாவீரர் வாரத்தில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது. 70 மாவீரர்களின் பெற்றோர்கள் யாழ்.பாங்ஷால் வீதியில் இருந்து குருநகர் சனசமூக நிலைய புதிய கல்யாண மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

குருநகர்ப் பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (206)



மணப்பெண் அலங்கார வகுப்பு

வெள்ளவத்தை Nature Way இல் மணப்பெண் அலங்கார Facials Wedding Structures, Rich Cakes, B' days Cake, தையல் Flower Decorations என்பவற்றுக்கான Orders ஏற்றுக் கொள்ளப்படும். இவற்றுக்கான வகுப் புக்கள் சான்றிதழ்களுடன் நடைபெறுகின்றன.

T.Luxmy, 18B Station Road, Wellawatta. Tel - 2505325. (2122)







# அரசின் நிர்வாக ஒழுங்கின்மையானது 'மொலட்டா' மாநாட்டில் வெளிப்பட்டது

கொழும்பு —

மொலட்டாவில் நடைபெற்று வரும் பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் இலங்கை அரசாங்கத்தின் ஒழுங்கற்ற நிர்வாகத் தன்மை வெளிப்பட்டு நின்றது.

இலங்கையின் சார்பில் பொது நலவாய மாநாட்டில் யார் பங்கேற்பது என்ற குழப்பம் கடந்த சில நாட்களாக அரசாங்கத்தில் இருந்தது.

இந்த மாநாட்டில் கடந்த வாரம் வரை வெளிவிவகார அமைச்சராக இருந்த அனுரா பண்டாரநாயக்க பங்கேற்பதாக பொதுநலவாய மாநாட்டினருக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புதிய அரசியல் மாற்றங்களையடுத்து வெளிவிவகார அமைச்சராக மங்கள சமரவீர நியமிக்கப்பட்டார். இதனால் அனுரா தனது பயணத்தை இரத்து செய்துள்ளார்.

இதனால் இலங்கையின் சார்பில் யார் பங்கேற்பது என்பது தெரிவிக்கப்படாமல் இருந்தது.

இந்த நிலையில் சமாதான செயலகத்தின் முன்னாள் பணிப்பாளரான ஜயந்த தனபால இந்த மாநாட்டில் பங்கேற்பார் என்று அறிவிக்கப்பட்டது. ரோமில் உள்ள அவர் தம்மால் மொலட்டா மாநாட்டுக்குச் செல்ல முடியாது என்று தெரிவிக்க உடனேயே ஜயந்த தனபாலவுக்குப் பதில் அனுரா பங்கேற்பார் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் பொதுநலவாய கூட்டத்தின் தொடக்கத்தில் நகைச்சுவை நிகழ்ச்சிகளையே இலங்கை அரசாங்கம் நிறைவேற்றியது.

சர்வதேச நாடுகளின் பிரதமர்களின் பெயர்களை அழைத்து வந்த நிலையில் இலங்கையின் ஜனாதிபதி ஜயந்த தனபால என்று அழைத்தார்கள்.

ஆனால் மேடைக்குச் சென்றதோ இங்கிலாந்துக்கான இலங்கைத் தூதர் கேசுனக சேனவர்த்தன அம்மையார். இலங்கையின் ஜனாதிபதி யார்என்றும் தெரிவிக்கப்படவில்லை.

அவருக்குப் பதில் யார் பங்கேற்பார் என்றும் தெரிவிக்கப்படவில்லை. அவர் ஆணா, பெண்ணா என்பதையும் கூட இலங்கை அரசாங்கம் தெரிவிக்கவில்லை.

இலங்கையின் இந்தச் செயற்பாடுகளால் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் முகம் சுளித்துக் கொண்டதோடு, இலங்கையின் நிர்வாக நிலைமைகளையும் பகிரங்கமாகவே உணர்ந்து கொண்டார்கள்.

# அரசின் நிலைப்பாடுகளை அறிய மகிந்தவுடன் நோர்வேக்குழு சந்திப்பு!

## அடுத்த மாதத்தில் நடைபெறும்

கொழும்பு —

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக கலந்துரையாடுவதற்காக நோர்வேயின் பிரதிநிதிகள் குழு அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்திக்கவுள்ளது.

வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் - இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தலைமையிலான நோர்வே தூதுக்குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சந்திக்கவுள்ளதாக நோர்வே தூதரகத்தின் புதிய ஊடகப் பேச்சாளர் தோமஸ் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் சமாதானம் குறித்த நிலைப்பாடு மற்றும் அவர்களது யுத்த தயாரிப்புக் குறித்து தன்னால் எதுவும் கூறமுடியாதெனத் தெரிவித்த அவர் - நீண்டகால சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இரண்டு தரப்பினரும் நேர்மையாகப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செயற்படுத்த வேண்டும் எனவும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்திக்கவரவுள்ள நோர்வே தூதுக்குழுவில் அந்த நாட்டு அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மும் உள்ளடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண மகிந்தவின் சிந்தனை உதவாது!

## பட்டிவீரக்கோன்

கொழும்பு —

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வெளியிடப்பட்ட மஹிந்த சிந்தனை எவ்விதத்திலும் நடைமுறைக்குப் பொருந்தாதென லங்கா சமசமாசக் கட்சியைச் சேர்ந்த பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

மஹிந்தவின் சிந்தனைகள், ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகளின் நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டது. அதனை அடிப்படையாக வைத்து மஹிந்த நடவடிக்கை எடுத்தால் நாடு மேலும் சிக்கலுக்குள் தள்ளப்படும்.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் பொதுவான நிலைப்பாடொன்றுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வரவேண்டுமெனவும், இதற்காக அவர் விரைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் தெரிவித்தார். (தே)

# கொழும்பில் தமிழ்ப்பெண் கைது

கொழும்பு

கொழும்பில் கடந்த சனிக்கிழமை மகிந்த ராஜபக்ஷ பதவியேற்பு நிகழ்வின்போது அரங்கத்துக்கு வெளியே சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடியதாகத் தெரிவித்து தமிழ்ப் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

தலவாக்கலையைச் சேர்ந்த அந்தப் பெண் விஜயகுமாரி என்றும்- கொழும் அவர் நிரந்தர வதிவிடமாகக் கொள்ளவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தேசிய அடையாள அட்டை மற்றும் இதர அடையாள ஆவணங்கள் எதுவும் அந்தப் பெண்ணிடம் இல்லை என்றும் தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிந்துவந்த அந்தப் பெண் கொழும்புக்கு வந்தமைக்கான காரணத்தைத் தெரிவிக்கவில்லை என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

அவரிடம் மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டுவருகின்றன.

# தேர்தல் கால முறைப்பாடுகள் காரணமாக பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தல் பணிகளில் கடமையைச் சரியாகச் செய்யாத 76 பொலிஸ் அதிகாரிகள் மீது சிறப்பு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் 300ற்கும் மேற்பட்ட பொலிஸார் இடமாற்றத்துக்குள்ளாகவுள்ளனர்.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள பொலிஸார் இந்தப் பணியிட மாற்றங்களுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற பின்பு பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய ஒழுங்கு நடவடிக்கையைப் போலவே இராணுவத்திலும் ஒழுங்கு நடவடிக்கை கடுமையாக இருக்கக்கூடும் என்றும், எதிர்வரும் நாட்களில் இதற்கான உத்தரவு வெளியாகலாம் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை; விவாதமொன்றை நடத்த வேண்டும்...!

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு—

மகிந்தராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை தொடர்பாக விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தேவையானால் இது தொடர்பான வாக்கொடுப்பு ஒன்றை நடத்த முடியும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர்எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

நேற்று அவசர காலச் சட்ட நீடிப்பு தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் - இது தொடர்பாக கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது இது குறித்த இறுதித் தீர்மானம் ஒன்றை எடுக்க முடியும் எனக் கூறினார்.

இந்த நாட்டில் இரண்டு வெவ்வேறு ஆட்சிகள் நடைபெறுவதை ஜனாதிபதித் தேர்தல் எடுத்துக் காட்டியுள்ள தாகத் தெரிவித்த அவர் -

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையின் அடிப்படையில் பேச்சு வார்த்தை எதுவும் நடத்த முடியாது எனவும் தெரிவித்தார்.

மூன்றாம் தரப்பு குறித்து ஜனாதிபதி தமது உரையில் எதனையும் தெரிவிக்கவில்லை எனவும் சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுர திஸாநாயக்க ஜனாதிபதி தேர்தலின் பொழுது பாரிய முறையில் எந்தவிதமான சமூகமாற்றமும் ஏற்படவில்லை எனத் தெரிவித்த அவர், சாதாரண மாற்றமே ஏற்பட்டதாக தெரிவித்தார்.

எப்படியிருந்த பொழுதிலும் தென்பகுதியில் உள்ள சகல அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் சமாதான பேச்சு வார்த்தைகளுக்கான பாதை வகுக்கப்படவேண்டும் எனவும் அவர் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

# சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - கூழாவடியில் நேற்றுமுன்தினம் இரவு 46 வயதான வினாசித்தம்பி கந்தசாமி என்ற குடும்பஸ்தர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

# ஊடகப் பணிப்பாளராக குணரட்ண நியமனம்!

கொழும்பு—

ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளராக நியூட்டன் குணரட்ண ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவற்றுடன்சுயாதீனதொலைக்காட்சி மற்றும் லக்கன்ட வானொலிச் சேவைகளின் தலைவராக மீளவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# அதிகாரப் பேராசை சந்திரிகாவுக்கு...!

கொழும்பு —

ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிய பின்னர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றுக்கு வரவேண்டுமென சந்திரிகா விடுத்த வேண்டுகோளை ஜனாதிபதி ராஜபக்ச மறுத்தமையானது - மிகவும் சரியான தீர்மானமென முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றுக்கு நியமிக்கப்பட வேண்டியது டலஸ் அழகப்பெருமாவே எனக்கூறிய அவர் 11 வருடங்களாக ஜனாதிபதி பதவியை வகித்த பின்பும் சந்திரிகாவுக்கு அதிகாரத்திலுள்ள பேராசை முடிவடையாமலிருப்பது கவலைக்குரிய விடயமெனவும் தெரிவித்துள்ளார். (தே)

# இலங்கையில் அண்மையில் நடைபெற்ற தேர்தல்தான் நியாயமானதாகவும் முன்னுதாரணமாகவும் நடைபெற்றது

கொழும்பு —

இலங்கையில் தற்போது நடைபெற்ற தேர்தல்தான் நியாயமானதாகவும் முன்னுதாரணமானதாகவும் நடைபெற்றதாக இந்திய தூதுவர் நிரூபமாராவ் தெரிவித்தார்.

பிரதமர் ரட்ணசிறிவிக்கிரநாயக்கவை கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நிரூபமராவ் சந்தித்துப் பேசினார்.

இது தொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

பிரதமருக்கு இந்தியத் தூதுவர் வாழ்த்துக்களைத் தெரிவித்ததாகவும் அண்மைக்காலத்தில் நடைபெற்ற முன்னுதாரண, நீதியான தேர்தல்இது என்றும் அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சிரைக்கு தீர்வு காண்பதில் இந்தியர் தனது ஆதரவை வழங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையேயான நல்லுறவை எவ்வித பிரச்சினையும் இல்லாமல் தொடர விரும்புவதாக இந்தியத் தூதுவரிடம் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறினார்.

பயங்கர வாதத்தையும் யுத்தத்தையும் கண்டித்த பிரமதர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படவேண்டும். என்றும் கூறினார். என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அடுத்த மூன்று மாதங்களுக்குள் பிரதமராகப் பதவி ஏற்பேன்!

## அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண

கொழும்பு —

இன்னும் மூன்று மாதங்களில் தான் பிரதமராகப் பதவியேற்பேன் என்று தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.எம். ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்காவும் என்னைப் பிரதமராக்குவதாகக் கூறியுள்ளனர்.

மூன்று மாதங்கள் அதற்காகக் காத்திருக்கவுள்ளேன். அரசாங்கத்தில் பிரதமராவதற்கு தகுதியானவன் நான்தான் நிறுபான்மை மக்களுடன் நல்லுறவு கொண்டுள்ள என்னால் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு பிரதமர் பதவியைப் பெறுவதற்காக நான் இன்னமும் காத்திருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மகிந்தவின் சகோதரருக்கு ஜெனரலாகப் பதவி உயர்வு!

கொழும்பு —

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஓய்வுபெற்ற இராணுவ கேணல் கொட்ட பாய ராஜபக்சவும், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளராக ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் எச்.எம்.ஹொட்டக தெனியவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரரான ஹொட்ட பாய ராஜபக்ச 1990 ஆம் ஆண்டு காலத்தில் லெப்.ஜெனரல் டென்சில் கொப்பே கடுவா யாழ். கோட்டை இராணுவ முகாமை விடுதலைப் புலிகளின் முற்றுகையிலிருந்து விடுவிப்பதற்கு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் கஜபாகு படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரியாகப் பணிபுரிந்தவராவார்.

இதேவேளை - ஹொட்ட பாய ராஜபக்சவுக்கு நான்கு நட்சத்திர ஜெனரல் பதவியுயர்வு அளிக்கப்படவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (தே)

# ஒரேநாளில் தொலைபேசி இணைப்பு!

கொழும்பு—

புதிய தொலைப் பேசிக்காக விண்ணப்பித்தவர்களுக்கு ஒரே நாளில் இணைப்பை வழங்க தாம் நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தபால் தொலை தொடர்பு அமைச்சர் டீ.எம்.ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

தொலைபேசி என்பது தற்சமயம் அத்தியாவசிய தேவையாக இருப்பதால், அப்படியான சேவைகளுக்காகப் பல வருடங்களாக ம களைக் காத்திருக்க வைக்க முடியாது எனத் தெரிவித்தார்.

நேற்று தமது அமைச்சின் பொறுப்புகளை கையேற்றதன் பின்னர் அவர் இந்தப் புதிய திட்டங்கள் குறித்து தெரிவித்தார்.

இதுதவிர, சீ.டீ.எம்.ஏ. தொழில் நுட்பத்தை மாவட்ட மட்டத்தில் விஸ்த்தரிக்கவும் தாம் உடன் நடிவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதாவும் அவர் தெரிவித்தார்.

# கொல்கத்தாவில் தென்னாபிரிக்காவிடம் படுதோல்வி அடைந்தது இந்திய அணி!



கொல்கத்தா—


இந்தியாவுக்கு எதிராக கொல்கத்தா ஈடன்காடன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த 4ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி பத்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித் - இந்திய அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார். தொடக்க ஆட்டக்காரர்களாக கௌதம் காம்பீர், இர்பான் பதான் ஜோடி களமிறங்கியது. இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. பொலக்கின் அபார பந்துவீச்சில் இந்திய தொடக்க விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரிந்தன.

முதல் ஓவரின் 3ஆவது பந்தில் பதான் ஓட்டமெதையும் பெறாமலேயே பவிலியன் திரும்பினார். அடுத்து டெண்டுல்கர் 15 பந்துகளில் 2 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ஷேவாக், காம்பீருடன் ஜோடி சேர்ந்தார். அடுத்த ஓவரிலேயே கௌதம் காம்பீர் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஸ்கோர் 49ஆக இருந்தபோது - ஷேவாக்கும், 71ஆக இருந்தபோது ராவிட்டும் ஆட்டமிழந்து சென்றனர். ஷேவாக் 20 பந்துகளில் 30 ஓட்டங்களைப் பெற்றார். ஆனால் ராவிட் 32 பந்துகளில் 6 ஓட்டங்களை மட்டுமே எடுத்தார்.



71 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இந்திய அணியை யுவராஜ் - கைவ் ஜோடி தான் சற்று தூக்கி நிறுத்தியது.

ஸ்கோர் 152ஐ எட்டும்வரை தாக்குப்பிடித்து ஆடியது இந்த ஜோடி. 6ஆவது விக்கெட்டாக யுவராஜ், எல்.பி.டபிள்யூ முறையில் போத்தாவின் பந்தில் ஆட்டமிழக்க நேரிட்டது. இவர் 78 பந்துகளில் 53 ஓட்டங்களை எடுத்தார்.

தொடர்ந்து கைவும் ஸ்கோர் 167ஆக இருந்தபோது ஆட்டமிழந்தார். இவர் 63 பந்துகளில் 46 ஓட்டங்களை எடுத்தார்.

யுவராஜ் - கைவ் ஜோடியும் ஆட்டமிழக்க இந்தியாவின் கடைசி நம்பிக்கையாக இருந்தது டோனி மட்டுமே. ஆனால், அவரும் 14 ஓட் டங்களுடன் ஆட்டமிழந்து செல்ல இந்திய அணியின் தோல்வி உறுதியானது.

அகர்கர் 11 ஓட்டங்களுடனும், ஹர்பஜன் ஓட்டமெதையும் பெறாமலும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 188 ஓட்டங்களுக்குள் சுருண்டு படுத்தது.



பந்துவீச்சில் பொலக் 3, ஹோல் 3, நெல், லாங்வெல்ற், கலிஸ், போத்தா தலா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

பின்னர் 189 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்க அணி ஆடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக சிமித், ஹோல் களமிறங்கினார்கள். அன்ட்ரூ ஹோல் நிதானமாக ஆட மறுமுனையில் கப்டன் கிரேம் சிமித் அதிரடியாக ஆடினார். இந்திய பந்துவீச்சை அவர் வெளுத்து வாங்கினார்.



சிறப்பாக ஆடிய சிமித் - சதமடித்தார். அவர் அடித்த 5ஆவது சதம் இதுவாகும். சதம் அடித்த பின்பும் அவர் சிறப்பாக அடித்து ஆடினார். இந்திய பந்துவீச்சாளர்கள் தொடக்க ஜோடியைப் பிரிக்க எடுத்த முயற்சி கடைசி வரை பலிக்கவில்லை.

35.5 ஓவர்களிலேயே தென்னாபிரிக்க அணி விக்கெட் எதையும் இழக்காமல் 189 ஓட்டங்களை எடுத்து 10



விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

சிமித் 124 பந்துகளில் 20 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 134 ஓட்டங்களுடனும், ஹோல் 94 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 48 ஓட்டங்களுடனும் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்திய அணி ஒருநாள் போட்டியில் 10 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியடைவது இது 4ஆவது முறையாகும். சொந்த மண்ணில் இத்தகைய தோல்வியைச் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும். அத்துடன் தென்னாபிரிக்க அணியுடன் இத்தகைய தோல்வியைச் சந்திப்பது 2ஆவது தடவையாகும்.

இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி 2-1 என்ற கணக்கில் முன்னணி வகிக்கிறது. 5ஆவது மற்றும் கடைசிப் போட்டி மும்பையில் நாளை பகல் - இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது. அதில் தென்னாபிரிக்கா வென்றால் முதல் முறையாக இந்திய மண்ணில் ஒருநாள் தொடரைக் கைப்பற்றிவிடும்.

## டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார் ஹைதபு!

ஹராரே—

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதைத் தொடர்ந்து டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாகத் தெரிவித்துள்ளார் சிம்பாப்வே அணியின் கப்டன் தைபு.

அவருக்கு அச்சுறுத்தல் விடுத்தது யார்? என்ன காரணத்துக்காக என்ற விபரத்தை அவர் வெளியிடவில்லை. ஆனால், அது குறித்து பொலிஸில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லையெனத் தெரிவித்துள்ளார் தைபு.

தற்போதைய சிம்பாப்வே கிரிக்கெட்டில் அதிகாரம் படைத்தவர்களால் உருவாகியிருக்கும் நிலை காரணமாக 80 சதவீதமும், எனக்கு வழங்கப்பட்ட கிரிக்கெட் ஒப்பந்த முறை பிடிக்காததால் 20 சதவீதமும் கிரிக்கெட்டிலிருந்து விலகுவதற்குக் காரணங்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை 24 டெஸ்ட்களில் விளையாடியுள்ள தைபு - 1273 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

## அவுஸ்ரேலியாவுடனான போட்டிக்கு நியூஸிலாந்து கப்டனாக விற்றோரி!

வெலிங்ரன்—

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளுக்கு நியூஸிலாந்து அணியின் கப்டனாக டானியல் விற்றோரி நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலிய அணி நியூஸிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அந்த அணிக்கு எதிராக விளையாடவுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையே சப்பல் - ஹட்லி கிண்ணத்துக்கான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரின் முதல் இரண்டு போட்டிகளுக்கே நியூஸிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளரான டானியல் விற்றோரி கப்டனாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இது குறித்து நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் பொதுமேலாளரான லிண்ட்சே கிரேக்கர் விடுத்துள்ள அறிக்கையில் -

கடந்த வாரம் பிளெமிங்கின் இடது காதுக்கு கீழே இருந்த புற்றுநோய்க் கட்டி சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. கடைசியாகக் கிடைத்த தகவலின்படி அந்தக் கட்டி தொடக்க நிலையில் இருந்தது என்று தெரியவருகிறது.

இந்தப் புற்று நோய்க்கட்டியால் அவரது நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டது. இதனால் அவருக்கு கடந்த புதன் கிழமை சத்திரசிகிச்சை நடந்தது.

அவரது உடற்தகுதியைக் கருத்திற் கொண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ள அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் அவருக்கு வாய்ப்பளிக்கப்படுமெனத் தெரிவித்தார்.

உலக சம்பியனான அவுஸ்ரேலியாவுக்கு எதிராக உள்நாட்டில் நடைபெறும் ஒருநாள் தொடருக்கு டானியல் விற்றோரி தலைமை தாங்குவார். இது அவருக்கு ஒரு நல்ல வாய்ப்பாகும்.

நதன் அஸ்ரில் துணைக்கப்டனாக இருப்பார். ஸ்ரீபன் பிளெமிங் முதல் இரண்டு போட்டியில் பங்கேற்காததால், அணி வீரர்களின் எண்ணிக்கை 13ஆக உள்ளது.

இருந்தாலும் முதல் போட்டிக்கு அணியில் புதிதாக யாரும் சேர்க்கப்படவில்லை. யாரும் நீக்கப்படவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நியூஸிலாந்து அணி -

டானியல் விற்றோரி (கப்டன்), நதன் அஸ்ரில், ஹமிஷ் மார்ஷல், ஸ்கொட் ஸ்ரைரிஸ், லூ வின்சென்ட், ஜேக்கப் ஓரம், ஜேம்ஸ் மார்ஷல், கிரேக் மக்மிலன், கிறிஸ் கெய்ன்ஸ், பிரண்டன் மக்கலம் (விக்கெட் காப்பாளர்), ஷேன் பொண்ட், ஜேம்ஸ் பிராங்ளின் மற்றும் மில்ஸ் ஆகியோர்.

## அவுஸ்ரேலிய அணியுடனான டெஸ்ட்; வலுவான நிலையில் மேற்கிந்தியா!



அடெலெய்ட்—


அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இனிங்ஸில் 405 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

நேற்றுமுன்தினம் 7 விக்கெட் இழப்புக்கு 352 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திய மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று தொடர்ந்து ஆடியது. பவலுடன் ஆட்டத்தைத் தொடர்ந்த லாறா- அலன்போடரின் உலக சாதனையை முறியடித்து முன்னேறினார்.

ஸ்கோர் 381ஐ எட்டியபோது மக்ராவின் பந்தில் லாறா ஆட்டமிழந்தார் 298 பந்துகளில் 22 பவுண்டரிகளுடன் 226 ஓட்டங்களை எடுத்தார். தொடர்ந்து எட்வேட்ஸ் களமிறங்க ஸ்கோர் 388ஆக இருந்தபோது பவல் வெளியேறினார். மக்ராவின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்த இவர், 14 ஓட்டங்களை எடுத்திருந்தார்.


இதன்பின் ஸ்கோர் 405ஆக இருந்தபோது 10 ஓட்டங்களுடன் களத்திலிருந்த எட்வேட்ஸை வோன் வீழ்த்த மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முதல் இனிங்ஸ் முடிவுக்கு வந்தது.

கொலிமோர் ஆட்டமிழக்காமல் 5 ஓட்டங்களுடன் இருந்தார். பந்துவீச்சில் மக்ரா, லீ தலா 3 விக்கெட்டுக்களையும், மக்கில் 2, சைமன்ஸ், வோன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



அடுத்து அவுஸ்ரேலிய அணி களமிறங்கியது. லாங்கரும், ஹைடனும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கி நின்றுபிடித்து ஆடினர். ஹைடன் விரைவாக ஓட்டங்களை எடுக்க - லாங்கர் சற்று மந்தமாகவே ஆடினார்.

அணியின் ஸ்கோர் 97ஐ எட்டியபோது - பிராவோவின் பந்துவீச்சில் சந்தர்போலிடம் பிடிகொடுத்து ஹைடன்



ஆட்டமிழந்தார். இவர் 58 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 47 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து லாங்கருடன், பொண்டிங் இணைய - இந்த ஜோடி ஸ்கோர் 200ஐயும் தாண்டித் தாக்குப்பிடித்தது. ஸ்கோர் 211ஆக இருந்தபோது - பொண்டிங் பிராவோவின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். இவர் 122 பந்துகளில் 8 பவுண்டரிகளுடன் 56 ஓட்டங்களை எடுத்தார்.

சற்று நேரத்திலேயே ஸ்கோர் 228ஐ எட்டியபோது - சதமடிப்பாரென எதிர்பார்க்கப்பட்ட லாங்கர் - எட்வேட்ஸின் பந்தில் பரிதாபகரமாக ஆட்டமிழந்தார். 174 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் 99 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து ஹொட்ஜ் - ஹசே ஜோடி ஆட்டத்தைத் தொடர - 3 விக்கெட் இழப்புக்கு 229 ஓட்டங்கள் என்ற நிலையில் 2ஆம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

## விளையாட்டு

## டெஸ்ட் போட்டிகளில் லாறா உலக சாதனை!

அடெலெய்ட்—



டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஓட்டங்களை எடுத்த அவுஸ்ரேலிய கிரிக்கெட் வீரர் அலன் போடரின் சாதனையை முறியடித்து உலக சாதனை படைத்தார் 36 வயதான மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் வீரர் லாறா.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக ஓட்டங்கள் பெற்றவர்கள் வரிசையில் முதலிடத்தில் இருந்த அலன் போடர், 156 டெஸ்ட்களில் 11174 ஓட்டங்களை எடுத்ததே இதுவரை உலக சாதனையாக இருந்தது.

அவுஸ்ரேலியாவின் அடெலெய்டில் நடைபெற்றுவரும் 3ஆவது டெஸ்ட் போட்டியில் நேற்று 226 ஓட்டங்களை எடுத்து போடரின் உலக சாதனையை மிஞ்சினார் லாறா. மொத்தம் 121 டெஸ்ட் போட்டிகளில் 11187 ஓட்டங்களை எடுத்துள்ளார். அவரது ஓட்டச் சராசரி 54.04 ஆகும்.

# யாழ்.மாவட்டத்தில் 4000 வீடுகள் இந்த ஆண்டில் அமைக்கப்படும்!

## உலகவங்கி வீடமைப்பு பணிப்பாளர் பத்மநாதன்

யாழ்ப்பாணம் —

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் - யாழ்.மாவட்டத்தில் 2006 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 100 கிராமங்களில் 4000 முதல் 5000 வீடுகள் வரை அமைக்கப்படவுள்ளதாக உலக வங்கியின் வட கிழக்குமாகாண வீடமைப்புத் திட்டப் பணிப்பாளர் சே.பத்மநாதன் தெரிவித்தார்.

2006 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள நிரந்தர வீடமைக்கும் திட்டம் தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதேச செயலர்களை சந்தித்த பின்னரே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

உலகவங்கி வழங்கிய 27 மில்லியன் டொலர் மற்றும் இலங்கை அரசின் 2 மில்லியன் டொலர் நிதியைக் கொண்டு 31270 வீடுகள் வடக்கு-கிழக்கு பகுதிகளில் அமைக்கப்படவுள்ளன. இதற்கமைய பயனாளிகளுக்கு நான்கு தவணைகளில் 500 சதுர அடிக்கு மேற்பட்ட வீட்டை அமைப்பதற்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படும்.

இதற்கமைய எமது திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 1500 வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 90 வீதமான பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. இதைவிட 2006 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் 4000 தொடக்கம் 5000 வீடுகளை நாம் அமைத்துக் கொடுக்க தீர்மானித்துள்ளோம். இதற்கு 100 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மேற்படி கிராமங்களில் சேதமடைந்த வீடுகள், மக்களின் தற்போதைய நிலை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு பயனாளிகள் தெரிவுசெய்யப்படுவர்.

எனவே, மேற்படி கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாகவோ, பயனாளிகள் தெரிவு தொடர்பாகவோ ஆட்சேபனை எதுவும் இருப்பின் தமக்கு தெரிவிக்கலாம் என்றும், அவை கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.

இதைவிட வடக்கு-கிழக்குப் பகுதிகளில் 4 மாவட்டங்களில் 15 பிரதேச செயலர் பிரிவுகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுக்க தாம் முன்வந்துள்ளதாகவும் - இதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் 7 பிரதேச செயலர் பிரிவுகளிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 பிரதேச செயலர் பிரிவுகளிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1 பிரதேசசெயலர் பிரிவிலும், யாழ்ப்பாணத்தில் 2 பிரதேச செயலர் பிரிவிலும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளத்தினால் பாதிப்படைந்த பொம்மைவெளி மக்களுக்கு உதவி!

யாழ்ப்பாணம் —

கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் கடும் மழையினால் அதிகம் பாதிக்கப்பட்ட யாழ்.உதவிஅர சாங்க அதிபர் பிரிவிலுள்ள பொம்மைவெளிக் கிராமத்தில் 75 குடும்பங்களுக்கு யாழ்.மா வட்டத்தமிழர் புனர்வாழ்வுக் கழகம்- உணவுப்பொருட்கள், உடைகள், சிறுவர்களுக்கான போஷாக்கு உணவுகள் என்பனவற்றைக் கடந்த வியாழக்கிழமை வழங்கியுள்ளது.

கிராம சேவையாளர் ரவீந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் மாவட்டப் பணிப்பாளர், பணியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இப் பொருட்களை வழங்கினர். பொம்மை வெளிக்கிராமத்தில் புனரமைப்பு வேலைகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் நிகொட் நிதியுதவியுடன் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# மாவீரர் தினத்தை முன்னிட்டு வலி.ப.தெ.வ.கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி நடாத்திய போட்டிகளின் முடிவுகள்!

வலிகாமம் —

மாவீரர் எழுச்சி நாளை முன்னிட்டு - வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் நடத்தப்பட்ட கவிதை மற்றும் வினாடி வினாப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அங்கத்துவ சங்கப் பணியாளரிடையே நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் -

1 ஆம் இடம் சி.குணராசா, 2ஆம் இடம் த.பாஸ்கரன் சுன்னாகம் ப.தெ.வள கூட்டுறவுச் சங்கம், 3 ஆம் இடம் தெ.ரவிக்குமார் தெல்லிப்பளை ப.தெ.வள கூட்டுறவு சங்கம்.

அங்கத்தவரிடையே நடத்தப்பட்ட போட்டியில் -

1 ஆம் இடம் மு.தவபாலன், சி.வசந்தா தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்.

வலிகாமம் கொத்தணிப் பணியாளர்களிடையே நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் -

1 ஆம் இடம் க.முருகானந்தன், 2 ஆம் இடம் க.சதாநந்தன் 3 ஆம் இடம் மா.தவலிங்கம்.

வினாடிவினாப் போட்டியில் -

1 ஆம் இடம் தெல்லிப்பளை ப.தெ.வ கூ.சங்கம், 2 ஆம் இடம் சுன்னாகம் ப.தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்.

கொத்தணி பணியாளரிடையே நடத்தப்பட்ட வினாடி வினாப் போட்டியில் -

1 ஆம் இடம் க.சத்தியசீலன், 2 ஆம் இடம் மா.தவலிங்கம், 3 ஆம் இடம் லோ.ரதி ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.

# பண்டத்தரிப்பில் கமநல நிலையம் அமைத்து தருமாறு கோரிக்கை!

சுதுமலை —

பண்டத்தரிப்புப் பகுதிக்கு தனியான கமநல கேந்திர நிலையம் ஒன்றை அமைத்துத் தருமாறு பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனத்தினரால், சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமது பகுதியில் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட கமநல கேந்திர நிலையமானது தமது பகுதியில் அமைக்கப்படாமல்-மானிப்பாயில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் இதனால், தமது பகுதியைப் புறக்கணித்து விட்டதாகவும். உடனடியாக தமது பகுதிக்கு தனியான ஓர் கமநல கேந்திர நிலையத்தை அமைத்துத் தருமாறும் சம்மேளனத்தினரால் வேண்டப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (44)

# சுழிபுரம் கம்பனை இடைத்தங்கல் முகாமுக்கு மனித உரிமை ஆணைக்குழுவினர் விஜயம்!

யாழ்ப்பாணம் —

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் சோகித பிரியதர்சன தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் கடந்த வியாழக்கிழமை சுழிபுரம் கம்பனை இடைத்தங்கல் முகாமுக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

அங்கு சென்ற இவர்கள் வெள்ளம் சூழ்ந்துள்ள முகாமைப் பார்வையிட்டு நிலைமைகளை ஆராய்ந்தனர். இந்த முகாமின் பரிதாப நிலை குறித்து கருத்துத் தெரிவித்த ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் சோகித பிரியதர்சன -

யாழ்.குடாநாட்டில் தொடரும் மழையையடுத்து நலன்புரி முகாமுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால், இங்கு வசிக்கும் மக்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. தொற்றுநோய்கள் பரவக்கூடிய அபாயமும் தோன்றியுள்ளது. தொண்டு நிறுவனங்கள் எவையும் இவர்களுக்கு உதவிகள் வழங்கவில்லை எனக் குறிப்பிட்டார். அத்துடன், முகாமின் இந்த நிலை குறித்து யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்துக்கு அறியத்தரப்பட்டுள்ளதோடு ஆணைக்குழுவின் தலைமையகத்தின் கவனத்துக்கும் கொண்டுவரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த இடைத்தங்கல் முகாமில் வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் வசித்துவருவது குறிப்பிடத்தக்கது.


# விழிப்பூட்டல் கருத்தரங்கு

மல்லாகம் —

"விவசாய இரசாயனங்களின் விளைவாகப் புற்றுநோய்'' என்னும் தலைப்பில் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு விவசாய பீடத்தின் பிரதான மண்டபத்தில் சிறப்புரை ஒன்று நடைபெறவுள்ளது. இவ்வுரையை யாழ்போதனா வைத்தியசாலையின் புற்றுநோயியல் ஆலோசனை நிபுணர் டொக்டர் ந.ஜெயக்குமாரன் நிகழ்த்தவுள்ளார். எனவே, இதில் அனைவரையும் பங்குபற்றிப் பயனடையுமாறு விவசாயபீட சமூகத்தினர் அன்புடன் அழைக்கின்றனர். (68)

# மாவீரர் நாள் நவம்பர் 27 - 2005

## நினைவொலி எழுப்பலும் சுடரேற்றலும்




தேசிய தலை வர் அவர்களின் மாவீரர் நாள் உரை -

இன்று மாலை 6 மணிக்கு ஒலி எழுப்பும் நிகழ்வு தொடங்கக் கூடிய தாக தேசியத் தலைவர் அவர் களின் மாவீரர் நினைவுரை நிக ழ்வு இடம்பெறும்.

**நினைவொலி எழுப்புதல் (6.05 மணி)**

தேசியத்தலைவர் அவர்களின் மாவீரர் நினைவுரை நிறைவடைந்தவுடன், உடனடியாக 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டிடங்களிலும் ஒரு மணித்துளி நேரம் ஒலி எழுப்பப்படும். உயிர் காப்புப் பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்றவகையில் நிறுத்தப்பட்டு, அமைதி பேணப்படுதல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06 மணி)**

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன், 6.06 மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும். இந்த நேரம் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழீழ மக்கள் எழுந்துநின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி, அகவணக்கம் செலுத்துதல் வேண்டும்.

**ஈகச்சுடர் ஏற்றல் (6.07 மணி)**

அகவணக்கம் நிறைவுற்றதும், 6.07 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்பட வேண்டும். மாவீரர்களின் பெற்றோர்கள் அவரவர் சுடர் ஏற்றவேண்டிய கல்லறைகள், நினைவுக் கற்களுக்குமுன்னால் மாலை 5.45 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருக்கும். மாவீரர் துயிலும் இல்லங்களில் உள்ள மாவீரர் கல்லறைகள், நினைவுக்கற்களுக்கு முன்னால் மாவீரர்களின் பெற்றோர்களும், குடும்பத்தினரும் அதேநேரம் மாவீரர் துயிலும் இல்லங்களில் இடம்பெயர்ந்த மாவீரர் பெற்றோர்கள் அவர்களுக்கென ஒழுங்குசெய்யப்பட்ட இடங்களிலும் ஈகச்சுடர் ஏற்றுவர்.

இவைதவிர துயிலும் இல்லங்களுக்கு வராத பொதுமக்கள் தமது இல்லங்கள், பொது இடங்கள், விளையாட்டு இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில், உரிய முறைப்படி ஈகச்சுடர் ஏற்றுவர். ஈகச்சுடர் ஏற்றும்போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும். (மாவீரர் ஈகச்சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறு வகையில் ஒளி உருவாக்குவதோ தவிர்க் கப்படல் வேண்டும்)

# திருட்டுப் பொருட்களை விற்கமுயன்றவரை வடமராட்சியில் பொதுமக்கள் மடக்கிப் பிடித்தனர்

பருத்தித்துறை —

பருத்தித்துறை கற்கோவளத்திலுள்ள கூட்டுறவுச் சங்ககடை ஒன்றை உடைத்து பொருட்களைத் திருடிச் சென்ற திருடன் கிராமக்கோட்டடியில் வைத்துப் பிடிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

திருடிய பொருட்களை ஓட்டோவில் ஏற்றிச் சென்று மந்திகைப் பகுதியில் வைத்து விற்க முற்பட்ட போது, திருட்டுப் பொருட்கள் என்பதை அறிந்த பொதுமகன் ஒருவர் பின்தொடர்ந்து வந்து கிராமக்கோட்டுப் பகுதியில் வைத்து மக்களால் சுற்றிவளைக்கப்பட்ட போது, பொருட்களை ஓட்டோவில் விட்டு தப்பியோடியுள்ளார். இவரது மோட்டார் சைக்கிள் ஓட்டோ வாடகைக்குப் பிடித்த இடத்தில் இருந்தது. அதை எடுக்க அவர் முற்பட்ட போது பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஓட்டோவிலிருந்து பவுடர், சோப், மாப்பெட்டி, குளுக்கோஸ் போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்ட போதும், 4 மூடை சீனியை இன்னும் காணவில்லை என திருட்டுப் போன சங்க முகாமையாளர் தெரிவித்தார்.

பருத்தித்துறை பன்னங்கட்டையைச் சேர்ந்த இவர் அண்மையில் திருட்டுத் தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தண்டனை பெற்று தற்போது விடுதலையாகியவர் என்பது தெரியவந்துள்ளது. (12)

# குறுகியகால மேசன் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன!

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட தொழில் துறைத்திணைக்களத்தின் அலுவலகத்தால், உலகவங்கி ''நெகர்ப்'' திட்ட நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள குறுகிய கால மேசன் தொழில் பயிற்சிக்குப் பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்வதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நான்கு மாதங்களைக் கொண்ட இப்பயிற்சி வகுப்பு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் நடைபெறவுள்ளது. நாளொன்றுக்கு 250 ரூபா ஊக்குவிப்புப் படியாக வழங்கப்படவுள்ளதுடன், பயிற்சி முடிவில் சான்றிதழும் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணத் தொகுதியும் வழங்கப்படும்.

பயிலுநர்கள் நேர்முகத் தேர்வினூடாக தெரிவுசெய்யப்படுவார்கள். ஆர்வமுடையோர் டிசம்பர் 2 ஆம் திகதிக்கு முன்னர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட தமது விண்ணப்பங்களை- மாவட்ட அலுவலர் தொழில் துறைத் திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட முகாவைத்துவ உதவியாளர் பி.ராகவன் கேட்டுள்ளார்.



**ஜேர்மன் நாட்டு டயகோனி நிறுவனத்தின் நிதியுதவியோடு இலங்கை மெதடிஸ் திருச்சபை வடக்கில் சுனாமியால் பாதிப்புற்ற சுமார் 70 பேருக்கு அண்மையில் வெளியிணைப்பு இயந்திரங்களை வழுங்கியது. இந்த நிகழ்வில் சுனாமி செயலணி நிர்வாக உத்தியோகத்தர் சந்திரன் பயனாளி ஒருவருக்கு இயந் திரத்துக்கான பத்திரத்தை வழுங்குவதைப் படத்தில் காணலாம்.**




# சென்னையில் ஓர் மழைக்காலம்

இந்திய – தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான சென்னை ஒருநாள் போட்டி மழையால் கைவிடப்பட்டது ரசிகர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இது முன்னரேயே எதிர்பார்த்தது தான். அதிலும் குறிப்பாக சென்னை ரசிகர்கள் போட்டியை நேரடியாக காணமுடியாத ஏமாற்றத்திலும் HAT-TRIC சாதனை படைத்துள்ளார்கள். அதாவது சென்னை சேப்பாக்கம் சிதம்பரம் மைதானத்தில் தொடர்ச்சியாக மழையால் ஆட்டம் பாதிக்கப்படுவது இது மூன்றாவது சந்தர்ப்பமாக அமைகிறது. இவற்றுள் இரண்டு ஒருநாள் போட்டிகளும், ஒரு டெஸ்ட் போட்டியும் அடங்கும்.



முன்னதாக 2003 ஒக்ரோபரில் நடைபெற்ற TVS முத்தரப்புத் தொடரில் இந்திய – நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில், இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் கைவிடப்பட்டதாக போட்டி நடுவரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இரண்டாவது சந்தர்ப்பம் சென்ற வருடம் ஒக்ரோபரில் அவுஸ்ரேலிய அணி இந்தியாவுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டபொழுது, சென்னையில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டி. இந்த டெஸ்ட் போட்டியில் இறுதி நாளன்று மழை கொட்டோ கொட்டென்று கொட்டியதால், அன்றைய தினம் 229 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்குடன் களமிறங்க இருந்த இந்திய அணியின் வெற்றியும் பறிபோய் இருந்தது.

தற்போது மூன்றாவது தடவையாக தென்னாபிரிக்காவுடனான போட்டியில் வர்ண பகவான் தன் கைவரிசையைக் காட்டிவிட்டார்.

இந்திய – தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டதுமே, சென்னையில் போட்டி நடைபெறுமா என்பது குறித்த சந்தேகம் முளைவிடத் தொடங்கியது. இதற்குக் காரணம் ஒக்ரோபர், நவம்பர் காலப்பகுதிகளில் சென்னையில் பருவமழை பொழிவது மட்டுமன்றி, வங்காளவிரிகுடா தாழமுக்க மையங்கள் வீச்சாகச் செயற்படுவதுமாகும்.

சென்னையில் நடைபெற்ற இறுதி மூன்று போட்டிகளையும் கவனத்தில் எடுக்கும்பொழுது – இந்திய கிரிக்கெட் சபையானது போட்டிகளை நடத்தி முடிப்பதற்காக மைதானக் கோட்டாவை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றதே தவிர, அப்போட்டிகள் நடைபெறும் காலப்பகுதியில் தெரிவு செய்யப்படும் மைதானம் அமைந்துள்ள நகரத்தின் காலநிலையைக் கவனத்தில் எடுக்கத் தவறுகின்றமையை இவை வெட்டவெளிச்சமாக்குகின்றன.

இலங்கையுடனான ஒருநாள் தொடர் நடைபெறும்போதே சென்னையில் கடும்மழை பெய்து மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்ததோடு, சென்னையே வெள்ளக் காடாகக் காட்சியளித்தது. எனவே இதனைக் கருத்தில் எடுத்தாவது சென்னைப் போட்டியை வேறு ஒரு இடத்திற்கு மாற்றியிருக்கலாம். ஏனென்றால் இது வொன்றும் சாத்தியப்படாத விடயமேயல்ல.

இந்த வருடம் மார்ச் மாதத்தில் பாகிஸ்தான் அணி இந்தியாவுக்கு வருகை தந்திருந்தபோது, ஒரு டெஸ்ட் போட்டி அகமதாபாத்தில் நடைபெறவிருந்தது. ஆனாலும் பாதுகாப்பின்மைக் காரணத்தைச் சுட்டிக்காட்டி பாகிஸ்தான் அங்கு விளையாட மறுத்தபோது, அந்தப் போட்டி கொல்கத்தாவுக்கு மாற்றப்பட்டிருந்தது. எனவே அதுபோல சென்னை ஒருநாள் போட்டியிலும் செயற்பட்டிருக்கலாம்.

சென்னையில் டிசம்பர் மாதமும் மழை பெய்யலாம் என்று கருதப்படும் நிலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்திய – இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் சென்னை சேப்பாக்கத்தில் ஆரம்பமாகவுள்ளது. எனவே இந்தப் போட்டி குறித்து இந்திய கிரிக்கெட் சபை என்ன முடிவை மேற்கொள்ளவிருக்கிறது என்பது இன்னமும் மூடுமந்திரமாகவே உள்ளது.


ஒன்றில் இந்த டெஸ்ட் போட்டியை வேறு இடத்துக்கு மாற்றி கோடிக் கணக்கில் இலாபம் சம்பாதிக்கப் போகின்றதா? அல்லது சென்னையிலேயே நடத்தி ஒரு டெஸ்ட் போட்டியை அநியாயமாக மழைக்கு ஒப்புக்கொடுக்கப்போகின்றதா? யாமறியோம் பராபரமே!

மறுபுறம், இவற்றுக்கு மேலாக வாயு பகவானால் அதிஷ்டக்காற்று சென்னையில் வீசி, சூரிய பகவான் வர்ண பகவானைத் தோற்கடித்து, ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்களையும் சந்தோஷ மழையில் நனைய வைக்கப் போகின்றாரா?

இன்னும் ஒருவாரத்தில் விடை தெரிந்துவிடும்.

- விமலன்

# அவர்கள் அவர்கள் தான்



ஜோல் ஹார்ணர்
களம் பல கண்டவர்

1980களில் மேற்கிந்தியக் கிரிக்கெட் அணி உலகின் முதன்மையான அணி. சென்றவிடமெல்லாம் வெற்றிமேல் வெற்றி. அந்த நாள் ஞாபகங்களை மறக்காத கிரிக்கெட் ரசிகர்கள் இந்த வெற்றிகளின் பின்னர் இருந்த வேகப்பந்து வீச்சாளர்களை மறந்திருக்கமாட்டார்கள். அன்டி றொபேட்ஸ், மைக்கல் ஹோல்டிங், சோடி ஒரு அறுவடை செய்து முடிக்க அடுத்து கொலின் குறொவ்ரும், ஜோல் ஹார்ணரும் தொடர்வார்கள். நான்கு பேருமே வேகப்பந்து வீச்சாளர்கள். மேற்கிந்தியத் தீவுகளைப் பொறுத்து இன்றைய வீரர்களுக்கு அது ஒரு கனாக்காலம் தான்.



பிரெட் லீ
வேகமே வாழ்க்கை?

முற்சொன்ன நான்குபேரில் ஒருவர் இன்றைய இரட்டையர் பற்றிப் பேசுகிறார். அவர் தான் ஜோல் ஹார்ணர். அவர் பேசுவது உலகின் அதிவேகப் பந்து வீச்சாளர்கள் பிரெட் லீ மற்றும் சொகைப் அக்தர் பற்றியே. இவரது கணிப்பின்படி இந்த இரண்டு பேருமே ஆஹா ஓஹோ என்று பேசும் அளவிற்கு ஜாம்பவான்கள் அல்ல.

இதற்கான நியாயங்களையும் எடுத்துக்காட்டுகிறார் இவர். B.B.C SPORTS பகுதிக்குச் செவ்வி வழங்கிய இவர் - நான் ஒரு உலக அணியைத் தெரிவு செய்வேனாகில், அந்த அணியில் இந்த இருவரும் இருக்க மாட்டார்கள் என்று கூறுகிறார். என்னைப் பொறுத்தவரை தொடர் தகைமையுடன் கூடிய விக்கெட்டுக்களை இடைவிடாது சரித்துக் கொண்டிருப்பவர்களை மட்டுமே நான் சிபார்சு செய்வேன். வெறும் வேகத்திற்கு என்ன மரியாதை இருக்க முடியுமென்கிறார். எங்கள் காலத்தில் நாங்கள் வினைத்திறன் மற்றும் அதனுடன் இணைந்த வெளிப்படுத்தல் (சரித்தல்) என்பவற்றில் மட்டுமே கூடிய அக்கறை கொண்டவர்களாக இருந்தோம். இந்த இருவரும் நல்ல பெறுபேற்றைப் பெற்றுள்ளார்கள் என்பதை இவர் மறக்கவில்லை. ஆனால் அங்கு காணப்படும் தொடர்ச்சி எத்தகையது என்பது தான் அவரது கேள்வி. 58 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய ஜோல் ஹார்ணர் 258 விக்கெட்டுக்களைச் சரித்தவர்.



சொகைப் அக்தர்
வாழ்க்கையோ வேகம்?

இவரது கணிப்பீட்டைப் பொறுத்து இன்று முதன்மையாகப் பேசப்படக் கூடியவர் கிளென் மக்ராவே. இவரது வயது சற்று அதிகரித்திருக்கலாம். ஆனால் இவரே EFFECTIVE BOWLER என்று நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கிறார்.

ரசிகர்கள் பற்றியும் ஜோல் ஹார்ணர் அதிருப்தி தெரிவிக்கத் தயங்கவில்லை. இன்றைய காலத்தில் ரசிகர்கள் வேகம் என்ற ஒன்றைப் பற்றிப் பேசுகிறார்களே ஒழிய செயற்திறன் பற்றி அக்கறை கொள்வதில்லை. இது அபத்தம் என்பது அவரது வாதம்.

இறுதியாகக் கூறும் போது ஒரு வேகப் பந்து வீச்சாளரை எதைக் கொண்டு மதிப்பிடுவது என்பதை ரசிகர்கள் தீர்மானித்துக் கொள்வது என்பதைப் பற்றி தம்மைத் தெளிவுபடுத்திக் கொள்வது நல்லது. வேகம் பற்றி அக்கறைப்படுபவர்கள் அந்த வேகம் அணிக்கு வெற்றியைக் கொடுக்குமா என்று பகுத்தாய்ந்தால் நல்லது என்று முடிக்கிறார்.

– லிவிங்ஸ்ரன்

# புதிய வரவும் புதிய உறவும்

அடுத்த வருடம் ஜேர்மனியில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆபிரிக்காவின் TOGO நாடு கலந்து கொள்ளத்தகுதி பெற்றது மிகவும் ஆச்சரியமாகப் பேசப்படுகிறது. இது இன்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாகப் பார்க்கப்பட வேண்டியது. இப்போது ஆசிய நாடுகளுடன் சேர்ந்து உதைபந்தாட்டத் தரத்தில் பேசப்படும் அவுஸ்ரேலியா பற்றிய பேச்சு முனைப்புப் பெற்றிருக்கிறது.

இதற்குக் காரணம் முப்பத்தியிரண்டு வருடங்களுக்குப் பிறகு உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு அவுஸ்ரேலியா தகுதி பெற்றிருப்பது. அடுத்த காரணம் தென் அமெரிக்க நாட்டின் உருகுவேயைத் தோற்கடித்து அவுஸ்ரேலியா ஜேர்மனி செல்லும் தகுதியைப் பெற்றிருப்பது. இந்த வெற்றியின் பின்னர் அவுஸ்ரேலிய உதைபந்தாட்ட அணி வீரர்கள் கருத்துக்கூறும்போது - ஆட்டத்துக்கு முன்னரேயே உருகுவே வீரர்கள் தம்மைப் பயமுறுத்தியதாகவும், மிகவும் அநாகரிகமாக நடந்து கொண்டதாகவும், இதனால் இரு வீரர்கள் கைகலப்பில் ஈடுபட நேர்ந்ததென்றும் கவலைப்படுகிறார்கள். அதாவது உதைபந்தாட்டத்தைக் குத்தகைக்கு எடுத்த லத்தீன் அமெரிக்க நாடொன்றுடன் ஆசிய நாடுகளின் தரத்தையே கொண்டு விளங்கும் அவுஸ்ரேலியா மோதுவதா என்ற மிதப்புத்தான் காரணம் என்பது தெரிகிறது என்கிறார்கள் மேலும்.



எங்களுக்கும் காலம் வரும்

இதெல்லாம் ஒருபுறம் இருக்க தென்கொரியா, ஜப்பான், ஈரான் சவுதி அரேபிய நாடுகளுடன் சேர்ந்து அவுஸ்ரேலியாவும் ஜேர்மனி செல்கிறது. கடந்த உலகக் கிண்ணப் போட்டிகளில் தென்கொரியா அரையிறுதி ஆட்டம் வரை முன்னேறியது ஆசிய நாடுகளுக்கு பெரும் உத்வேகத்தைக் கொடுத்தது. அதோடு இப்போது ஆசிய உதைபந்தாட்ட சங்க அங்கத்துவத்தையும் அவுஸ்ரேலியா பெற்று, நாற்பத்தி ஆறாவது நாடாக அமைப்பில் இணைந்து கொள்ளும் நிலையில், அவுஸ்ரேலிய வெற்றி ஆசிய வெற்றியாகவே காட்டப்படுகிறது. அதிகாரிகள் கருத்துக் கூறும்போது, எம்மாலும் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு இணையாக உதைபந்தாட்டம் ஆடமுடியும் என்றும், கால ஓட்டத்தில் ஐரோப்பாவுடனும் சமதையாக வளரும் சந்தர்ப்பம் வரும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள்.

ஐரோப்பிய, லத்தீன் அமெரிக்க நாடுகள் உதை பந்தாட்ட உலகின் முதன்மையானவை. ஆனால் ஆசிய நாடுகளுக்கும் இவற்றுக்கும் இடையே தகுதி பொறுத்து பாரிய இடைவெளி ஒன்று இருப்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இருந்தும் தென் கொரியா 2002 இல் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றமை, அவுஸ்ரேலியா உருகுவேயைத் தோற்கடித்து 2006 உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டமை என்பன ஆசியப் பிராந்தியத்தில் உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

– நிர்மலன்

# புதுப்புனல் பாயட்டும்

இலங்கை இந்தியாவுடன் 6:1 என்ற கணக்கில் ஒருநாள் தொடரில் தோல்வியைத் தழுவிய பின் பல்வேறு தரப்பில் இருந்தும் உணர்வலைகள் பலவிதமாக வெளிப்பட்டன. செய்த தவறுகள் எடுத்துக் காட்டப்பட்டு, இனி செய்ய வேண்டியதென்ன என்ற வாறாக கருத்துகள் வெளிப்படுகின்றன.


மாற்றம் இல்லையேல் ஏமாற்றம்

முன்னாள் சர்வதேச நடுவர் அசோக டீ சில்வா பல பக்கத்திலும் பார்க்கிறார். பொதுவாக 'A' அணிகளின் வீரர்கள் சர்வதேச நுழைவிற்கான அங்கீகாரம் பெற்ற வீரர்கள் என்பதைக் குறிப்பிடும் அவர் இலங்கை ஏன் 'A' அணியொன்றை வைத்திருக்கிறது என்று கேள்வி எழுப்புகிறார். குறைந்தது மூன்று 'A' அணி வீரர்களாவது இலங்கை ஒருநாள் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது ஏன் நடைபெறவில்லை என்பது புரியாத புதிராக இருக்கிறது என்கிறார்.

இதோடு தொடர்பாக நூறு வீத FITNESS இல்லாத வீரர்கள் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டமைக்கு அதிருப்தி தெரிவிக்கிறார். இதைவேறு விதமாக நாசுக்காகக் குறிப்பிடுகிறார். டெனிஸ் லிலி, றிச்சட் ஹெட்லி, சச்சின் டெண்டுல்கர் போன்ற வீரர்கள் தாங்கள் நிறை தகுதியில் இல்லை என்று உணர்ந்து, தாமாகவே குறிப்பிட்ட காலம் விலகியிருந்து மீண்டும் அணிக்குள் வந்து மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். எந்தப் பிரபல்ய வீரராக இருந்தாலும் இலங்கை பொறுத்து இந்த விதியைப் பின்பற்றியிருந்தால், அவர் சிறிது காலம் பொறுத்து புதிய வீச்சுடன் வந்திருக்க முடியும். அதோடு இன்று தனது அணிக்கும், பயிற்றுனருக்கும், தெரிவாளர்களுக்கும் மொத்தத்தில் நாட்டுக்கே நன்மை செய்தவர்களாக இருந்திருப்பார்கள் என்று பொரிந்து தள்ளுகிறார். (யாரை மனதில் வைத்து பேசுகிறார்?)


திலான் சமரவீர இனி நிலை மாறும்

இப்படிக் கூறும் இவர் எதிர்வரும் டெஸ்ட் போட்டிகளில் சனத் இல்லாமை என்பது இந்திய அணியின் தைரியத்தை மேலும் அதிகரித்துவிடும் என்பது ஒரு பாதகமான நிலைதான் என்கிறார்.


2007இல் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ணப் போட்டியில் முத்திரை பதிக்க வேண்டுமாயின் என்ன செய்யவேண்டும் என்பதற்கு அவர் கூறும் விளக்கம் பின்வருமாறு அமைகிறது. புதிய வீரர்களை அறிமுகம் செய்து இரண்டு மூன்று SENIOR வீரர்களையும் இணைத்துக்கொண்டு அணியை அமைத்துக்கொள்ள வேண்டும். இதனையே அவுஸ்ரேலியா செய்து கொண்டு வருகிறது. அதில் வெற்றியும் கண்டுள்ளது என்கிறார். இவர் எடுத்துக்காட்டாவிட்டாலும் தற்போது இந்திய அணி இதனைத்தான் வெற்றிகரமாகச் செய்து கொண்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

இந்தக் கருத்து நியாயமானதாகவே படுகிறது. இலங்கை அணியைப் பொறுத்து, அறிமுகம் என்பது மிக அரிதாகவே இருக்கிறது. வரிசையாக பழைய பெயர்களே காணப்படுகின்றன. இந்தப் போக்கில் போனால் கரிபியன் பிராந்தியம் இலங்கைக்கு வெகு தூரமாகப் போகும் என்பதை மறுக்க முடியவில்லை.

இலங்கைத் தெரிவாளர்கள் தயக்கத்தைவிட்டு வெட்டொன்று துண்டுரெண்டாக முடிவுகள் எடுக்க வேண்டும். கங்கூலி பொறுத்து இந்தியா எடுத்ததுபோல, சில பிரபல வீரர்கள் பொறுத்து அவுஸ்ரேலியா எடுத்தது போல, நிக்கி போஜே, ஹேர்ஷல் கிப்ஸ் இந்தியா வர மறுத்தபோது அவர்களை தென்னாபிரிக்கா தூக்கியெறிந்தது போல முடிவெடுக்கும் தைரியம் பெறவேண்டும். அதுவே இலங்கை அணியின் எழுச்சிக்கு ஒரேவழி. தைரியம் இன்மை என்ற காரணம் தவிர வேறு ஏதாவது காரணங்கள் இருந்தால், உண்மையில் அதீத இளமைத் திறமை அவமே போய்க்கொண்டிருக்கிறது என்பது உண்மை என்பதற்கும் அப்பால், மற்றவர்கள் பரிகசிக்கும் நிலைக்கும் இலங்கை அணிவந்துவிடும். இது தேவையா?

— ஜோசப்கிருஷ்ணா

# இது இவர்களின் பாணி


மைக்கல் கிளார்க் எனக்கா இந்தக் கதி

சிலவேளைகளில் அவுஸ்ரேலிய கிரிக்கெட் தெரிவாளர்களுக்கு இரக்கம் என்பதே இருப்பதில்லை. ஆஷஸ் தொடரை இழந்த பின்னர் அவுஸ்ரேலிய அணியில் கொத்துக் கொத்தான மாற்றங்கள் ஏற்படாவிட்டாலும் யாருக்கும் நோகாமல் சில மாற்றங்கள் ஏற்பட்டன. டேமியன் மாட்டின், சைமன் கெட்டிச், ஜேஸன் ஜிலெஸ்பி, மைக்கல் கஸ்பரோவிச் ஆகியோர் படிப்படியாக காணாமற் போயினர்.

இந்த வரிசையில் அவுஸ்ரேலிய அணியின் கதாநாயகனாகக் கருதப்பட்ட ஒருவர் காணாமல் போகப் போகிறார். மைக்கல் கிளார்க் உடைய தோற்றம், திறமை இரண்டும் அவரது பிம்பத்தைத் தனித்துப் பிரித்தெடுத்து பளிச்சென்று காட்டிக் கொண்டிருந்தன.

2004 ஒக்ரோபரில் இந்தியாவுக்கு எதிரான தனது முதலாவது டெஸ்ட் அறிமுகத்தில் 151 ஓட்டங்கள் பெற்றதுடன் எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்தவர்.

அடுத்த மாதமே தாயகத்தில் நியூசிலாந்துக்கு எதிராக பிறிஸ்பேனில் 141 ஓட்டங்களைக் குவித்து அதிர்ச்சி வைத்தியம் செய்தவர்.

ஆனால் அதன்பின் இதுவரை ஒரு டெஸ்ட் சதம் கூட பெற்றுக்கொள்ள முடியாத துரதிஷ்டசாலியாகி விட் டார். பிறிஸ்பேன் டெஸ்டைவிட்டால் அதன் பின் இவரது துடுப்பாட்ட சராசரி 24.57 மட்டுமே.

எனவே அவுஸ்ரேலிய அணியில் இருந்து தூக்கப்படுகிறார் மைக்கல் கிளார்க். இவரின் இடத்தைத் திறமையாகவே நிரப்ப ஹொட்ஜ் இருக்கிறார். முதல் வரிசைக்கு மைக் ஹூசே இருக்கிறார். எனவே மைக்கல் கிளார்க் உள்ளூர் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளுடன் தன்னை இணைத்துக் கொள்ளட்டும். இவருக்கு சிறிது மாற்றம் தேவைப்படுகிறது. உள்ளூர்ப் போட்டிகளில் நன்றாகப் பயிற்சி பெற்று தன் ஆட்டத் திறமையைப் புடம்போடட்டும்.


மைக் ஹூசே சிறிது வழுக்கினால் எனக்கும் இது தான்

இவரது ஆற்றல் நன் கறியப்பட்டுள்ளது. எனவே சில பருவங்கள் உள்ளூர் போட்டிகளில் பங்கு பற்றுவது நல்லதென்றே கருதுகிறோம். இவரது எதிர்காலம் ஒளிமயமானது என்றவாறாக அறிக்கைகள் வெளியாகின்றன.

அணியென்று வரும்போது அங்கு அவுஸ்ரேலிய வெற்றி முதன்மையே ஒழிய பிரபல்யம், மூப்பு, முன்னாள் சிறந்த சராசரிகள் என்பவை எல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதேயில்லை.

இதனாற்தான் இன்று வரையில் இருவகைக் கிரிக் கெட் போட்டிகளிலும் அவுஸ்ரேலியர்களே முதன்மை பெற்றுக்கொண்டு, அதனைத்தக்க வைத்துக் கொண்டும் வருகிறார்கள்.

இதெல்லாம் இன்னும் சிலருக்குப் புரிந்திருந்தால், அவுஸ்ரேலியாவைப் பார்த்து பெருமூச்சு விடும் நிலை ஏற்பட்டிருக்காது.

— ஜெராட்

# கட்டப்படும் கைகள்

பாகிஸ்தான் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்தை வெல்லும் என்று யாரும் நினைத்திருக்கமாட்டார்கள். ஆனால் 'அற்புதமாக' வென்று காட்டினார்கள் என்று தான் சொல்ல வேண்டும். அந்த வெற்றியில் வேகப்பந்து வீச்சாளர் ஷபீர் அகமட்டின் பங்கும் கணிசமானது. மொத்தம் ஐந்து விக்கெட்டுகள் சாய்த்தவர் அவர். இப்போது என்னடாவென்றால் இன்னொரு முறை தற்காலிகமாவது டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓரங்கட்டப்பட்டு விடுவாரோ என்ற நிலை உருவாகியுள்ளது.


ஷபீர் அகமட் காயங்கள் ஆறும்

முதலாவது டெஸ்ட் போட்டியின் போது ஷபீர் அகமட்டும், சொகைப் மலிக்கும் பந்துவீசிய முறையில் குறை உள்ளது என்று நடுவர்கள் புகார் செய்துள்ளனர். இதனை ICC விசாரித்து சிலவேளை குற்றவாளிகளைக் கண்டுவிட முன்பு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அதாவது ஷபீர் அகமட் உடைய பந்துவீச்சை சரிசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட உத்தேசித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, அவரை இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடாமல் செய்துள்ளது. இன்சமாம் கருத்துக் கூறும் போது களத்தில் இறக்கி களங்கப்படுத்தி, அவருடைய எதிர்காலத்தை கேள்விக்குரியதாக்க விரும்பவில்லை என்று கூறியிருக்கிறார்.


பிலி போடன் நீங்க சொன்னா OK

இவர் மூன்றாவது நாளில் எடுத்த மூன்று விக்கெட்டுகளும் நடுவர்களான அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த சைமன் டஃபல் மற்றும் நியூசிலாந்தைச் சேர்ந்த பிலிபோடன் இருவரையும் புருவத்தை உயர்த்த வைத்துள்ளது. மேலும் முதல் இனிங்ஸில் 193 ஓட்டங்கள் பெற்ற டிரெஸ்கொதிக்கின் இலக்கை வீழ்த்தியதுடன் கொலிங்வூட், ஜெரெய்ன்ட் ஜோன்ஸ், ஆஸ்லி ஜைல்ஸ் ஆகியோரையும் கவிழ்த்தவர் இவர். இங்கிலாந்தின் இரண்டாவது இனிங்ஸிலும் ஒரு விக்கெட். அது அணித்தலைவர் டிரெஸ்கொதிக்குடையது. ஐந்து ஓட்டங்கள் பெற்ற நிலையில் வீழ்த்தப்பட்டது.

இப்படிப்பட்ட பந்து வீச்சாளரை இழப்பதென்பது கடினமானதொன்று. இருந்தாலும் இவருக்கு இணையான வேகப்பந்து வீச்சாளர்கள் பாகிஸ்தானில் இல்லாமல் இல்லை. எனவே ஒருவரின் இழப்பு இன்னொருவரின் கொடுப்பினை என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

— மக்டலின்

விளையாட்டு அரங்கம்



# புதுக்குடியிருப்பு பொதுநோக்கு மண்டபத்தில் மாவீரர்கள் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு



புதுக்குடியிருப்பு—

மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் புதுக்குடியிருப்பு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் மத்திய கல்லூரி மண்டபத்திலிருந்து பொதுமண்டபத்துக்கு மாவீரர் பெற்றோர் அழைத்து வரப்பட்டு நிகழ்வுகள் ஆம்பமாகின.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக்கொடியை தளபதி கேணல் ஆதவன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் தலைமையுரையை புதுக்குடியிருப்புப் பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன் நிகழ்த்தினார். சிறப்புரையை தளபதி கேணல் ஆதவன், கடற்படைச் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

அதனைத் தொடர்ந்து தளபதிகளும், போராளிகளும் மாவீரர் பெற்றோருடன் கலந்துரையாடினர்.

# மாவீரர் நாளை முன்னிட்டு நடத்தப்பட்ட ஓவியப் போட்டி முடிவுகள் வெளியாகின

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்பின் அனுசரணையுடன் தமிழீழ நுண்கலைப் பிரிவினரால் மாவீரர் நாளை முன்னிட்டு நடத்தப்பட்ட ஓவியப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

**பாடசாலை மட்டப் போட்டி**

முதலாமிடம் - சிவசுப்பிரமணியம் (தரம் 13 - கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயம்), இரண்டாமிடம் - சந்திரகாந்தன் டினேஸ்காந்தன் (தரம் 13 - கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயம்), மூன்றாமிடம் - வரதேவதாஸ் கவிதாஸ் (தரம் 13 - கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயம்).

**திறந்த போட்டி**

முதலாமிடம்-மயில்வாகனம் கணேஷானந்தம் (இல.55, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்), இரண்டாமிடம் - ச.நந்தகுமார் (ஆசிரியர், கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வட்டக்கச்சி), மூன்றாமிடம் - செம்பலிங்கம் ஜெகன் (புலிமச்சிநாதிகுளம், மாங்குளம்) ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசுச் சான்றிதழ்களும், பரிசில்களும் நேற்று ஆனையிறவுப் படைத் தளத்தில் சிறப்பாக மாவீரர் நாளையொட்டி அமைக்கப்பட்ட அரங்கில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.


# மலகூட பாவனையாளர்களுக்கான சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு

வவுனியா—

வவுனியா வடக்கு, புளியங்குளம் வடக்குப் பகுதிக் கிராமங்களான புதூர், பரசன்குளம், புதூர்சந்தி ஆகிய கிராமங்களில் டி.ஆர்.சி. மற்றும் ரி.ஆர்.ஓ. ஆகிய நிறுவனங்களின் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 25.11.2005 அன்று மலகூடப் பாவனையாளர்களுக்கான சுகாதாரம் சார்ந்த விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கை நடத்தினர்.

இந்த நிகழ்வில் 03 கிராமங்களைச் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட மலகூடப் பாவனையாளர்களும், வவுனியா மாவட்ட தமிழீழ சுகாதார சேவைகள் இணைப்பாளார்களும் மற்றும் புளியங்குளம் வடக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர்ஆகியோருங்கலந்துகொண்டனர்.

# முல்லைத்தீவுப் பிரதேசத்தில் மாவீரர் நாள் எழுச்சி நிகழ்வு



முல்லைத்தீவு—

மாவீரர்நாள் எழுச்சி நிகழ்வுகள் முல்லைத்தீவு நகரில் நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் முல்லைத்தீவு மகாவித்தியாலய விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் மண்டபத்தில் ஆரம்பமாகின.

பொதுச்சுடரேற்றலைத் தொடர்ந்து தேசியக் கொடியேற்றல், ஈகச்சுடரேற்றல், மலர் வணக்கம், அகவணக்கம் என்பன இடம்பெற்றன.

காலை நடைபெற்ற இந்த நிகழ்வில் கடற்புலிகளின் நளாயினி தாக்குதல் படையணி மற்றும் சாள்ஸ் தாக்குதல் படையணி ஆகியவற்றின் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, கடற்புலிகளின் தளபதி மங்களேஸ், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மேலாளர் மோகன் உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதேவேளை - மாவீரர் நாள் ஆரம்பமானதைத் தொடர்ந்து முல்லை நகரமெங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு, வீதிகளில் எழுச்சி வளைவுகள் நிறுவப்பட்டு, மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

# தாலிக்கொடி கண்டெடுப்பு

கிளிநொச்சி—

தாலிக்கொடியொன்று கண்டெடுக்கப்பட்டு, அன்றைய தினமே உரியவரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமையன்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்றது.

சம்பவதினம் கிளிநொச்சி கனகாம்பிகைக்குளத்தைச் சேர்ந்த து.தயாவாணி என்பவர் சிகிச்சைபெறும் பொருட்டு வைத்தியசாலைக்குச் சென்ற சமயம், வைத்தியசாலை வளாகத்தில் வைத்து தாலிக்கொடியை கண்டெடுத்து வைத்தியசாலையில் கடமை புரியும் காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அன்றைய தினம் மேற்படி வைத்தியசாலைக்கு வருகை தந்து, தாலிக்கொடியைத் தவறவிட்டவரான இரத்தினபுரத்தைச்சேர்ந்த சூ.விநோதினி என்பவர் வைத்தியசாலை காவல்துறையிடம் முறையிட்டு, அதற்குரிய ஆவணங்களை கையளித்ததைத் தொடர்ந்து காவல்துறையினரால் தாலிக்கொடி உரியவரிடம் கையளிக்கப்பட்டது. தயாவாணியை வைத்தியசாலை நிர்வாகத்தினர் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**நவம்பர் 27**

1744: வெப்ப நிலையை அளந்தறியப் பயன்படும் செண்டிகிரேட் வெப்பமானியைக் கண்டுபிடித்துத்தந்த சுவீடனைச் சேர்ந்த ஆண்டர்ஸ் செல்ஷியஸ் காலமானார்.

1840: அலக்ஸாண்டியா உடன்படிக்கை கையெழுத்தானது. இந்த உடன்படிக்கைப்படி எகிப்திய மன்னர் முகம்மது அலி ஓட்டோமான் கடற்படைக் கப்பல்களைத் திருப்பிக் கொடுக்கவும், சிரியா மீதான ஆக்கிரமிப்பு அதிகாரத்தை விட்டுக் கொடுக்கவும் உடன்பட்டார். இதற்குப் பதிலாக பிரிட்டனும் எகிப்தின் பரம்பரை அரசுரிமையை அவருக்கு அளித்தது.

1875: சூயஸ் கால்வாய் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின்கீழ் வந்தது.

1898: முதன் முதலாக மலையேறும் போட்டி பாரிஸ் அகே சாண்டலூப் என்னுமிடத்தில் நடந்தது.

1909: நிகராகுவாவில் அரசை எதிர்த்து நடந்த கிளர்ச்சியை அடக்க அந்நாட்டு ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று அமெரிக்கப் படைகள் நிக்கரகுவா சென்று இறங்கின.

1912: பிரான்ஸிற்கும் - ஸ்பெயினுக்கும் இடையே மொராக்கோ தொடர்பாக உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது.

1914: முதன்முதலாக மிஸ். மேரி ஆர்லன், மிஸ்.ஈ.எஃப்.ஹர்பன் என்னும் இரு பெண்கள் பிரிட்டன் லிங்கள் ஷையரிலுள்ள கிராந்தம் காவல் நிலையத்தில் பொலிஸ் பணியில் இணைந்தனர்.

1917: நேச நாடுகள் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் இறங்காவிட்டால், ரஷ்யா தனியாகப் போர் நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளும் என்று டிராட்ஸ்கி எச்சரிக்கை செய்தார்.

1935: நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை 1914 ஆம் வருடம் முதல் தனது இதழ்களை மைக்ரோ பிலிம்மில் பதிவு செய்ய ஆரம்பித்தது.

1941: டென்மார்க் அச்சு நாடுகளுடன் கூட்டுச் சேர்வதை எதிர்த்து அந்நாட்டின் பல இடங்களில் கிளர்ச்சிகள் ஏற்பட்டன.

1947: அவுஸ்ரேலியா அரசு வங்கிகள் அனைத்தையும் நாட்டுடமையாக்கியது.பணவீக்கத்தையும், பொருளாதார வீழ்ச்சியையும் கட்டுப்படுத்துவதற்காகவே இவ்வாறு செய்யப்படுவதாக அரசு அறிவித்தது.

1964: கொங்கோ புரட்சியாளர்களால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த 1650 வெளிநாட்டவர்களையும் பெல்ஜியம் நாட்டு பரசூட் படையினர் மீட்டனர்.

1965: 20,000 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட சமாதானப் பேரணி வோஷிங்டனில் நடந்தது.

1970: பாப்பரசர் ஆறாம் போல் மூன்று நாள் சுற்றுப் பயணமாக மணிலா விமான நிலையத்தில் வந்திறங்கிய போது, அவரைக் கொலை செய்ய முயற்சி நடந்தது. அதிஸ்டவசமாக அவர் எதுவித காயமுமின்றி தப்பிக் கொண்டார்.

☆ : லண்டனைச் சேர்ந்த வாலெக்ஸ்யெஸ் வரைந்த ஜீவான் டி பரேஜாவின் ஓவியம் ஒன்று 2,310,000 பவுண்ஸுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

1971: இந்த வருடம் மே மாதம் 19ஆம் திகதி ரஷ்யா ஏவிய மார்ஸ்-2 என்ற விண்கலம் செவ்வாயில் தான் கொண்டுசென்ற கோளிறங்கு கலத்தை இறக்கியது. எனினும் அந்தக் கலம் திட்டமிட்டபடி தொழிற்படவில்லை.

1979: முதன்முதலாக அவுஸ்ரேலியாவில் சிட்னி நகரில், இரவு நேரம் மின்னொளியில் அவுஸ்ரேலிய அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையே ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நடந்தது.

1980: பிரான்ஸைச் சேர்ந்த 27 வயதான ஜாக்யூஸ் மார்ட்டின் சஹாரா பாலைவனத்தை ஓடிக் கடக்க, அல்ஜீரியாவிலிருந்து தனது மரதன் ஓட்டத்தை ஆரம்பித்தார். நாள் ஒன்றுக்கு 50-60 கிலோ மீற்றர் வரையிலான தூரம்வரை ஓடிய இவர், தொடர்ந்து 50 நாட்கள் ஓடி, 1981 ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி வட நைகரில் சிண்டர் என்ற இடத்தைச் சென்றடைந்தார்.

1983: பாரிஸிலிருந்து போக கோட்டா சென்று கொண்டிருந்த கொலம்பியா போயிங் விமானம், ஸ்பெயினில் மாட்ரிட் அருகே நொருங்கி விழுந்ததில் 183 பேர்கள் பலியாகினர்.

1985: பிரிட்டனுக்கும், அயர்லாந்துக்கும் இடையே உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. இந்த உடன்படிக்கைப்படி வட அயர்லாந்துப் பிரச்சினை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்த வழியேற்பட்டது.

தொகுப்பு : - சந்துரு

# சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு தமிழீழசுகாதார சேவையினர் வேண்டுகோள்

கிளிநொச்சி—

வெள்ளத்தால்இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களை சுகாதார விதிமுறைகளைக் கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மக்கள் அனைவரும் கொதித்தாறிய நீரைப் பருகுவதுடன், உணவுகளை மூடிவைத்தல் வேண்டும் எனவும், உணவை உட்கொள்வதற்கு முன்பதாகச் சூடுகாட்டி உட்கொள்ளமாறு அறிவித்துள் ளதுடன், மலசலம் கழிக்கும் இடங்களைத் துப்புரவாகவும், சுகாதாரதிற்கேற்ற வகையில் பாதுகாப்பாகவும் பேணும்படி கேட்டுள்ளது.

அத்துடன் வயிற்றோட்டம், வயிற்றுழைவு போன்ற நோயால் பாதிக்கப்பட்டிருப்பின் உடன் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுமாறும் தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுள்ளனர்.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

சாவுக்கும் அஞ்சாத வீரத்திற்கும், ஈகத்திற்கும், இலட்சியப் பற்றிற்கும் எமது மாவீரர்களுக்கு நிகர் எவருமேயில்லை என நான் பெருமிதத்துடன் கூறுவேன்.

*- தமிழீழத் தேசியத் தலைவர் -*

## நமது நோக்கு

### மனதில் உறுதி கொள்ளும் நாள்...

இன்று மாவீரர் நாள்.

விழிகளை மூடி குழிகளுள் வாழும் வீரச் செல்வங்களுடன் ஒளியேற்றி ஆத்மார்த்தமாகப் பேசும்நாள்.

தமிழீழத் தேசியத் தலைவர் அந்த மாவீரச் செல்வங்களின் சுதந்திரதாகம் நிச்சயம் தணிக்கப்படும் என்ற உறுதியை அவர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் தனது மாவீரர்நாள் உரைமூலம் உணர்த்தி சிங்கள தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும், தமிழ்த் தேசியத்தின் எழுச்சியை, உணர்ச்சியை, விடுதலைப் போராட்டத்தை விடியல் தோன்றும்வரை தொடரும் இலட்சிய வேட்கையை அறிவிக்கப்போகும் நாள்.

நேற்றுமுன்தினம்தான் இலங்கையின் புதிய ஜனாதிபதி தற்போதைய சமாதான முயற்சிகளுக்கான சகல பாதைகளையும் மூடிவிட உறுதிபூண்டுள்ள திட்டங்களைக் கொண்ட தனது கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளார்.

இன்று தமிழ் மக்களின் தேசியத்தலைவர் தனது கொள்கை - மற்றும் தமிழர்களின் இலட்சியப் பற்றுறுதியை மீண்டும் வலியுறுத்தும் பிரகடனத்தை எந்த விதமான குழப்பமுமின்றி தெளிவாக வெளிப்படுத்தவே செய்வார். அவரின் உரையில் சொல்லப்போகும் செய்தி தமிழ்பேசும் மக்களின் விடுதலையையும், தமிழர் தாயக பூமியின் சுதந்திரத்தையும் உறுதிசெய்வதாகவே இருக்கும் என்ற நம்பிக்கையுடன் காத்திருப்பது தமிழ்மக்கள் மட்டுமல்ல, ஒளிப்பிரவாகமாக விழித்திருக்கப்போகும் மாவீரர்களும்தான்.

அவர்களின் அழிவற்ற ஆத்மா தேடும் தாயக விடுதலையை வென்றுதரப்போகும் தலைவனின் அந்த ஒருநாள் உரைக்காகத்தானே அவர்கள் இந்த நாளில் துயில்கலைந்து சிலிர்த்திருக்கப்போகின்றன.

"நான் உயிருக்குயிராக நேசித்த தோழர்கள், என்னோடு தோளோடு தோள்நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டுகாலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழும் போதெல்லாம் எனது இதயம் வெடிக்கும். ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்து போவதில்லை. இந்த இழப்புகள் எனது இலட்சிய உறுதிக்கு மேலும் உரமூட்டியிருக்கின்றன" - என்று மாவீரர்கள் குறித்து அவர்கூறிய வார்த்தைகள், சொல்லும் செய்தி மிக அர்த்தமுள்ள ஒன்றேயாகும்.

விடுதலைப்போராட்டத்திற்கு உயிரூட்ட தமது உயிரையே உரமாக்கிய மாவீரர்களின் அர்ப்பணிப்புத்தான் - தியாகம்தான் - தற்கொடைதான் இன்று எம்மை வீழ்ந்துபடாது நிமிர்ந்து நிற்க வைத்திருக்கிறது.

தமிழ்மக்களை, அவர்களின் தேசிய தனித்துவத்தை, வீரத்தை, கலை, பண்பாட்டு விழுமிய மேனமைகளை உலகம் பிரமிக்கும் வகையில் அடையாளப்படுத்தி நிற்கிறது.

"மாவீரர்கள் மகத்தான இலட்சியவாதிகள். தாம் தழுவிக்கொண்ட இலட்சியத்தைத் தம் உயிரிலும் மேலாக நேசித்தவர்கள், மக்களின் விடுதலையை தமது மானசீக இலட்சியமாக, வாழ்வின் உயரிய குறிக்கோளாக வரித்துக்கொண்டவர்கள், அந்த இலட்சியத்திற்காகவே மடிந்தவர்கள்" - எனத் தேசியத் தலைவர் மாவீரர் குறித்து கூறிய விளக்கமானது உண்மையான இலட்சியவாதிகளும் உயரிய இலட்சியமும் எந்த வலிய பகையையும் எதிர்கொண்டு வரலாற்றைப் படைக்கும் திறன் வாய்ந்தது என்ற உண்மையை எம்மக்களிடையே ஆழமாக உணர்த்தி நிற்பதாலேயே - வரலாறு எம்மைப் பிரமிப்புடன் நிமிர்ந்து பார்க்கும் நிலையில் நாம் உயர்ந்து நிற்கிறோம்.

இன்று தமிழ் மக்கள் வாழும் உலகெங்கும் ஏற்றப்படப்போகும் மாவீரர்களுக்கான ஒளிச்சுடர்கள் எமது தாயக விடுதலைச் சூரியனின் முதற்கதிராகவே ஒளிரும் என்பது திண்ணம்.

ஆலயங்கள், தேவாலயங்களில் ஒலிக்கப்போகும் ஒரு மணித்துளி நேர மணியோசை விடுதலைக்கீதத்தின் உயிர் நாதமாகவே இசைக்கும்.

மாவீரர்கள் நினைவில் நெஞ்சுவிம்மி, கண்கள் பனிக்க, நெடுமூச்செறிய, மௌனித்து நிற்கப்போகும் அந்த மணித்துளிப் போதில் உங்கள் தடங்களில் எங்கள் பாதங்கள் விடுதலையை வென்றெடுக்கும் வரை தொடரவே செய்யும் என்ற உறுதியுரையை மனம் உச்சரிக்கவே செய்யும்.

*267, Navalar Road,*
*Jaffna.*
*T.P. - 021-2225107*
*www.eezhanaadu.com*




## மாவீரர் நாள் நவம்பர் - 27.2005

"இந்த நிலத்தில் புதையுண்டிருக்கும் ஆயிரம் ஆயிரம் சமாதிக் கற்களும் விடுதலையையே குறியீடு செய்து நிற்கின்றன. வீதிகளில், சந்திகளில், சுவர்களில், நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சிகளாகவே எமக்குக் காட்சி தருகின்றன."

*- தமிழீழத் தேசியத் தலைவர் -*

## நாடும் நடப்பும்







# விடுதலைக்காவியத்தின் உயிர் வரிகள்...!

விடுதலை என்பது வாழ்வின் அதியுயர்ந்த விழுமியம். அந்த விழுமியத்தை இலட்சியமாக வரித்து, அதற்காக வாழ்ந்து, அதற்காகப் போராடி, அதற்காக மடிந்த எமது மாவீரர்கள் மகத்தான மனிதப் பிறவிகள். அவர்களது வாழ்வும், வரலாறும் எமது விடுதலைக் காவியத்தின் உயிர் வரிகள்.

மாவீரர்களே, தமிழர் தேசம் உங்களுக்குத் தலை வணங்குகிறது. உங்களது தற்கொடையால் தமிழீழ மக்கள் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள். உங்களது இரத்தத்தாலும், வியர்வையாலும், உங்களது இலட்சிய உறுதியாலும் கட்டியெழுப்பப்பட்ட எமது விடுதலை இயக்கம், இன்று யாராலும் வெற்றிகொள்ள முடியாத மாபெரும் போராட்ட சக்தியாக உலகப் புகழீட்டி நிற்கிறது. போரரங்கில் நீங்கள் படைத்துச் சென்ற மகத்தான சாதனைகளையே இன்று உலகரங்கில் நாம் அரசியல் வெற்றிகளாக அறுவடை செய்து வருகிறோம்.

இன்று உலகம் மாறிவருகிறது. உலக ஒழுங்கும் மாறிவருகிறது. உலக நாடுகளின் உறவுகளும் மாறி வருகின்றன. மனித சமுதாயம் முன்னென்றும் காணா புதிய சவால்களுக்கு முகம்கொடுத்து நிற்கிறது.

இன்றைய உலக நிதர்சனத்தை, அதன் யதார்த்தப் புறநிலைகளை நாம் உதாசீனம் செய்யமுடியாது. இன்றைய காலத்தையும், இக்காலத்தில் கட்டவிழும் சூழலையும் நாம் ஆழமாகப் புரிந்து கால, நிலை மாற்றங்களுக்கேற்ப எமது விடுதலைப் பாதையை செப்பனிடுவது அவசியம். இன்றைய காலத்தின் தேவை அது. உலகப் போக்குடன் முரண்படாது, உலக வரலாற்றின் ஓட்டத்துக்கு இசைவாக நாமும் எமது போராட்ட வரலாற்றை முன்னகர்த்திச் செல்வதே விவேகமானது. இன்றைய வரலாற்றின் கட்டாயமும் இதுவே.

எமது விடுதலைப் போராட்டம் கால் நூற்றாண்டு கால வரலாறாக நீட்சி பெற்றுச் செல்கிறது. இருபது ஆண்டுகளுக்கு முன் இன்றைய நாளில் எமது முதலாவது மாவீரன் களப்பலியாகியதைத் தொடர்ந்து இன்று வரை பல்லாயிரக்கணக்கில் எமது போராளிகள் விடுதலைப் போரில் களமாடி வீழ்ந்திருக்கிறார்கள். எமது இனத்தைப் பேரழிவிலிருந்து பாதுகாத்து, எமது தாயக நிலத்தை அந்நியனிடமிருந்து மீட்டெடுக்க எமது விடுதலை இயக்கம் அளப்பரிய அர்ப்பணிப்புக்களைச் செய்துள்ளது. எமது மாவீரர்களின் இம்மகத்தான தியாகங்களால் எத்தனையோ தடவைகள் நாம் பேரழிவுகளின் விளிம்பிலிருந்து மீண்டிருக்கின்றோம். மரணத்தின் வாயிலுக்குச் சென்று மறுபிறவி எடுத்திருக்கின்றோம். வல்லாதிக்க சக்திகளின் தலையீடுகளைத் தனித்து நின்று தகர்த்திருக்கின்றோம். எமது விடுதலை இயக்கம் இன்று வானளாவ வளர்ந்து நிற்கிறது, நிமிர்ந்து நிற்கிறது. எமது இயக்க விருட்சத்தின் வேர்களும், விழுதுகளுமாக நிற்பவர்கள் எமது மாவீரர்களே.

*2002ஆம் ஆண்டு*
*தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு*
*தமிழீழ தேசியத் தலைவர்*
*அவர்கள் ஆற்றிய*
*உரையிலிருந்து...*



# மாவீரர்களின் நினைவோடு...!

ஈழத்தமிழரை மட்டுமல்ல, உலகத்தமிழரையே உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள் உயிர்களை ஈகம் செய்த மாவீரகள்தான்.

ஒரு மனிதன் எந்தச் சந்தர்ப்பதிலும் உயிரைக் காப்பாற்றப் போராடுவான். உயிர் வாழ்வதற்கு அச்சமிருக்குமிடத்திலிருந்து வெளியேறவே விருப்பப்படுவான் ஆனால.. ஈழத்தமிழரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு தங்கள் உயிர்களை ஈகம் செய்தவர்களை தமிழப் பரம்பரை எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் வணங்க வேணடும்.

தமிழரின் பண்டைய வரலாற்றைச் சரியான முறையில் ஆய்வு செய்வோமெனில் - பண்டைத் தமிழரின் வாழ்வோடிருந்த வழிபாடு 'நடுகல்' வழிபாடாகும்.

கால நீரோட்டத்தில் இது மாறுபட்டிருப்பது மறுக்கமுடியாத உணமையாகும் இன்றைய நவம்ர இருபத்தேழு எம்மிடையே நடுகல் வழிபாட்டை மீண்டும் தந்துள்ளது. இதற்குக் காரணமானவர்கள் 17,903 மாவீரர்கள். ஒவ்வொரு மாவீரர்களுக்கும் ஒவ்வொரு கதையிருக்கும். வரலாற்றுத் தடமாக வீரவரலாற்றை புதுப்பித்த போற்றுதலுக்குரியவர்கள். உலகில் தமிழருக்கு ஓர் அடையாளம் தந்தவர்கள்.

ஈழவிடுதலைப்போராட்டத்தில் மண்ணை விடுவிப்பதோடு மட்டுமல்லாமல், தமிழரைப் பிரித்தாள நயவஞ்சகமாக விதைக்கப்பட்ட நச்சு விதைகளாகப் பலவற்றை கூறமுடியும். அந்த விதைகள் இன்று மாவீரர்களால் களையப்பட்டுள்ளன. இதனை நாம் துயிலுமில்லங்களுக்குச் செல்லும் போது முழுமையாகக் காணமுடியும்.

மூடநம்பிக்கை, சாதி, மதம் எனப் பல சமூக வளர்ச்சித் தடைக் காரணிகளை மாவீரர்கள் உடைத்தெறிந்துள்ளனர். குழந்தைகளும், பெண்களும் என எந்த வேறுபாடுகளுமின்றி துயிலுமில்லங்களுக்குச் சென்று மாவீரர்களை வழிபடுவார்கள். வழிபாட்டுத் தலமொன்றுக்குச் சென்றுவந்த திருப்தியோடும், அந்த உணர்வோடுமே திரும்புவார்கள், துயிலுமில்லமெதிலும் எந்தச் சாதி, சமய அடையாளத் தகவல் எதுவும் இருக்காது.

மாவீரர்கள் சாதியென்ற சொல்லையே தூக்கியெறிந்தவர்களாகிவிட்டனர். பல மதங்கள் உருவாகிய போதும், மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர்கள் உயர்வாக இருப்பார்களேயன்றி... மத ரீதியான பிரிவினை கிடையாது. எந்த மதத்தைச் சேர்ந்தவரும் துயிலுமில்லத்துக்குள் புனிதமான வழிபாட்டுக்காகவே செல்கின்றனர்.

எமது இனம் அழிக்கப்படுவதை கைகட்டி நின்று பார்த்திரோம். அழிந்து போவோமென்று அஞ்சி யோடோம. வீரமுடன் களமாடி, வெற்றிகளை எமதாக்கி தமிழரின் எதிர்கால வாழ்வு மகிழ்ச்சியாக அமைய வேண்டும் என்பதற்காக எங்களுயிர்களை ஈகம் செய்யத் துணிந்தோம் எனச் சொன்னவர்களே இந்த மாவீரர்கள்.

இவர்களும் மனிதர்கள் தான். இவர்களுக்கும் உறவுகள் மீது அன்பும், பாசமும், ஆசைகளும் நிறையவே இருந்திருக்கும். வீடு பற்றியும் நினையாதவராக இருந்திருக்கமாட்டார்கள். இவையெல்லாவற்றுக்கும் மேலாக மக்களையும், மண்ணையும் நேசித்தார்கள். இந்த நேசிப்புக்கு வேறு காரணமொன்றும் உள்ளது. பேரினவாதுகள் தமது கையில் இலங்கைத் தீவின் ஆட்சியதிகாரம் உள்ளது. நாம் எதனை வேண்டுமென்றாலும் செய்யலாமென எண்ணி தமிழர் மீது கொடுமைகளைக் கட்டவிழ்த்து விட்டனர். அரச பயங்கரவாதம் கோரத்தாண்டவமாடியது. இதனால் துயர் பட்டவர்களின் துயர் துடைக்கவே மாவீரர்களாகியவர்கள் வீரமுடன் களமாடினார்கள்.

இது பொதுப்படையான காரணம். தனித்தனியே துயர் சுமந்த கதையெழுதுவதெனில் வரலாற்று நாயகர்கள் பற்றி வரலாற்றுக் காவியங்கள் பலவற்றையெழுத முடியும்.

மாவீரர்களால், எம்மிடையே புரையோடி வந்த இன்னொரு கீழ்மையான செயலும் அகன்றுள்ளது. ஆண், பெண் வேறுபாடோ, பிரதேச வேறுபாடோ மாவீரர்களிடம் கிடையாது. இதனை நாம் எல்லோரும் அறிந்து கொண்டு செயற்படுவோமெனின். எம்மைப் பிரிததாளவோ, அடிமைப்படுத்திவிடவோ எவராலும் முடியாது.

உலகத்தில் மெய்யானவர்களாகவும், எமக்கு கடவுளர்களாகவும் உள்ளவர்களே மாவீரர்கள். இந்தக் கூற்றுக்கு பிழைப்புவாத அரசியல்வாதிகள் வேறு எந்த கருத்தைக் கூற முற்பட்டாலும் அது எடுபடாது என்பதனை மக்கள என்றென்றும் எடுத்துரைப்பர்.

மாவீர்களின் சிந்தனை அனைத்துலக சமூகத்தின் பார்வைக்கு சில வேளை புலப்படாமல் போகலாம். மக்களை சிங்களப் பேரினவாதிகள் கொடுமைப்படுத்தும் போதும் அனைத்துலக சமூகத்துக்கு புலப்படவில்லைத்தான்.

எமது இனம் துவம்சம் செய்யப்படுகின்றதே.. விடுதலை பெற வேண்டுமே என களமாடியவர்கள் மாவீரர்கள். அவர்களின் உயிர்களால் ஈழத்தமிழர் நாம் பலம் பெற்றோம்.

இதனைத் தலைவர் விளக்கமாகக் கூறுகின்றார்.

நாம் பலமான நிலையில் உறுதியாக நின்று பேசுகின்றோம். இராஜதந்திர முன்னெடுப்புக்களின் வெற்றியை - பலம் தீர்மானிக்கிறது. பலத்துக்கு முன்னுரிமையும், வலுவான அந்தஸ்தும் உண்டு. களமுனையில் நாம் பெற்ற வெற்றிகள் எமது பலத்தை நிரூபிக்கின்றன. எமது கோரிக்கைகளின் நியாயப்பாடுகளை எமது பலம் வெளிப்படுத்துகின்றது. தலைவரின் இந்தக் கருத்தினை மேலும் வலுவாக்கி தலைவரின் தலைமையிலான தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பலத்தை ஏற்படுத்தியவரகள் மாவீரர்கள்.

இன்று மாவீரர்களை நினைவு கொள்ளும் போது. மாவீரர்களின் சிந்தனையை, கனவை நிதர்சனமாக்க தேவைப்படும் பலத்துக்கு ஆதரவு கொடுப்பது வரலாற்றுக் கடமை. மாவீரர் நினைவு - நாள் தோறும் இருக்க வேண்டும். மாவீரர்கள் எம்மினத்தை காத்த கடவுள்களே. ❖

**கனகரவி**

# மரணத்தை வென்ற மைந்தர்கள்



எதற்குமே ஒரு விலையுண்டு என்கிறார்கள். இது பணம் என்ற வடிவில் தான் இருக்கிறது என்றில்லை. பொருளுக்குப் பொருள் கொடுத்து வாங்கிய பண்டமாற்று முறையும் விலைக்கு விலை கொடுக்கும் ஒரு முறைதான். விலைக்கேற்ற உடல் உழைப்பைக் கொடுப்பதும் இன்னெரு முறையாக இருக்கிறது.





விலை கொடுத்துப் பொருள் வாங்கும் இந்த முறையில் வித்தியாசமானதும், ஒப்பீடு இல்லாததுமாகத் திகழும் முறையும் இருக்கவே செய்கிறது. விலை மதிப்பற்ற உயிரையே விலையாகக் கொடுக்கும் முறைதான் இது. தன் இலட்சிய நோக்கை அடையும் வேட்கையில், தம் உயிரைத் துச்சமாக மதித்து, அதையே விலையாகக் கொடுத்து, உயிரை இழப்பவர்கள் இவர்கள். தாம் கொடுத்த உயிரின் விலையாக, தாம் ஆசைப்பட்ட பொருள் கிடைக்காவிட்டாலும், அதற்காகத் தான் ஒரு சிறிய விலையைக் கொடுத்து விட்ட ஆன்ம திருப்தியில் மீளாத்துயில் கொண்டு மண்ணில் வித்தாகி எம்முடன் என்றும் வாழ்பவர்கள் இவர்கள்.

மனிதன் சாவைக் கண்டு அஞ்சுபவன். மரணபயம் அவனைத் தொற்றிக் கொள்ளும் போது, அவன் முகம் வெளிறி, நடமாடும் பிரேதமாகி விடுகிறான. அந்த மரண பயத்தை வென்று, தன் சாவை முன்கூட்டியே அறிந்து கொண்டு, இலக்கை நோக்கி, மனம் தளராது முன்னேறி, தன் பணியைச் செவ்வனே முடித்து, மாவீரர்கள் ஆவது ஏன்பது எல்லோராலும் முடிந்த செயலல்ல. அந்த அளவுக்கு மனதில் உறுதியும், வைராக்கியமும், இலட்சிய நோக்கை அடைவது அசாதாரண நிகழ்வே.

கார்த்திகைத் திங்களில், வருடாவருடம் தமிழீழம் என்ற அதியுயர் இலட்சியத்தை அடையும் இலக்கோடு, தம் உயிர்நீத்து, விததாகி இன்று கல்லறைகளில் உறங்கும் மாவீரர்களை, உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் எண்ணிப் பார்க்கின்றார்கள்.

நீங்கள் மரணிக்கவில்லை, நாளைய தமிழ் ஈழத்துக்கு வித்துக்களாகி, அமைதியாய் உறங்குகின்றீர்கள் என்றே அனைத்துத் தமிழர்களும் உறுதியாக நம்பி, இந்தத் திங்களில் அவர்களை நினைவு கூருகின்றார்கள். மரணத்தை வென்ற மைந்தர்கள் என்றே இவர்களை அழைக்கத் தோன்றுகின்றது.

தமிழீழம் எங்கும், தமிழர்கள வாழும் தேசம் எங்கும் தேசிய மாவீரர் எழுச்சி வாரம் பெரிய அளவில் அனுஷ்டிக்கப்படுகின்றது. மாவீரர்கள் நினைவாக இரத்த தானம் செய்தல், சிரமதானப் பணிகளை மேற்கொள்ளல், மாவீரர்கள் நினைவாக மரங்களை நாட்டுதல், உயிர் நீத்த மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவித்தல் போன்ற நிகழ்வுகள் இந்த வாரத்தில் இடம் பெறுகின்றன. அவர்கள் நினைவாக கார்த்திகை மாதத்தில பூக்கும் கார்த்திகைப் பூ, தமிழீழத்தின் தேசியப் பூவாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

நம் தாய் மண்ணில் தேசியப் பூவாகக் கௌரவிக்கப்பட்டு, பெருமையடைந்து விட்ட இந்த அழகிய மலர் பற்றி சில வரிகள் தரலாமென்று நினைக்கிறேன். **Gloriosa Lily** என்பது தான் இதன் ஆங்கிலப் பெயராகும்.

இது ஏப்பிரல் மாதம் 2004 ஆம் ஆண்டு தமிழீழத்தேசிய மலராகப் பிரகடனமாகி இருக்கிறது. கொடியாகப் படரும் இந்தச் செடியின் தண்டும், பூவும், வேர்களும் நஞ்சுத் தன்மை கொண்டவை. லில்லி மலர்க் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பூங்கொடியாகவே இது இருக்கிறது. தமிழீழக் கொடியில் காணப்படும் சிவப்பு, மஞ்சள் நிறங்களை ஒத்த வண்ணங்கள், கார்த்திகைப் பூவிலும் காணப்படுவது இது சிறப்பாகும்.

தன் உயிரை நீத்து தன் தாயகத்தின் வளர்ச்சிக்கு அருங்கொடையாகக் கொடுக்கும் தற்கொடைப் போராளிகள் வேறெங்கு காணப்படுகின்றார்கள் என்றொரு கேள்வி இங்கே பிறக்கிறது. சிங்கள அரசை நடுநடுங்க வைக்கும் ஒப்பற்ற கரும்புலிகளை நினைவு கூரும் இந்த வேளை, உலகெங்கும் பரந்துள்ள நாடுகளின் கோலம் பற்றிச் சற்றே நோக்குவது இங்கே பொருத்தமாக இருக்கலாம்.

தேசிய விடுதலைக்காக தமது உயிரை இழப்பது என்பது 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளிலும், அன்றைய சோவியத் ஒன்றியத்திலும் இருந்துள்ளது என்கிறார்கள். வியட்நாம் யுத்தத்திலும் இந்த முறை கையாளப்பட்டிருக்கிறது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது, ஜப்பானியர்கள், தற்கொலைப் போராளிகளாக விமானத்தில் வந்து கூட்டுப்படைகளைத் தாக்கிய நிகழ்வை உலகம் என்றும் மறக்காது?.

நிஜத்தில் இவர்களைக் குறிக்கும் ஜப்பானிய சொல் தரும் அர்த்தமே வேறு. 1281 இல் மொங்கோலிய கடற்படை, ஜப்பானியர்களை முற்றுகையிட முயன்றபோது, இறைவன் அனுப்பிய கொடைபோல ஒரு சூறாவளி ஏற்பட, கடற்படையை நிர்மூலமாக்கி ஜப்பானியர்களை இந்தச் சூறாவளி காப்பாற்றியிருக்கிறது. இதைத் தெய்வீகத் தன்மைகொண்ட காற்று என்ற பொருள்படும்படி.அப்பொழுது ஜப்பானியர்கள் இந்தச் சூறாவளியை தமது மொழியில் ஒரு பெயரிட்டு அழைத்தார்கள். இந்தப் பெயர் நாளடைவில், தற்கொடைப் போராளிகள் பின்னால் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

கி.பி. 1100 ஆம் ஆண்டுக்கும் 1500 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில், இஸ்லாமிய மதப் பிரசாரத்தை மேற்கொண்டு சிறுசிறு குழுக்களாகச் செயற்பட்ட தீவிரவாதிகள், தமது உயிர்களைத் துச்சமென மதித்து, தற்கொலைத் தாக்குதல்களில் இறங்கி, பல இராச்சியங்களை ஆட்டம் காண வைத்திருக்கின்றார்கள். இவர்களின் அட்டகாசம் இரண்டு நூற்றாண்டுகள் தொடர்ந்திருக்கின்றன. **Assassin** என்ற ஆங்கிலப் பதம் இவர்களை வைத்தே உருவாகியதாகச் சொல்லப்படுகின்றது.

**Assassin** என்று அழைக்கப்பட்ட இந்தக் குழுவினருக்கு, இராணுவம் என்று எதுவுமே இருக்கவிலலை. தலைவர்களால் பொறுககியெடுக்கப்பட்டவர்கள், மாறுவேடங்களில், ஈரான், சிரியா ஆகிய நாடுகளின் மலைப் பிராந்தியங்களில் மறைந்திருந்து, அச்சுறுத்தலை ஏற்படுத்தும் ஒரே நோக்கோடு தமது தாக்குதலை அப்பொழுதெல்லாம் மேற்கொண்டிருக்கின்றார்கள். 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஐரோப்பிய யாத்திரிகரான மார்க்கோ போலோ தன் குறிப்புகளில் இவர்கள் பற்றி எழுதியிருக்கின்றார் என்பதும் ஆச்சரியமான தகவல் தான்.

ஈரானின் தலைநகரிலுள்ள மலைப்பிராந்தியங்களில் வயோதிபர் ஒருவர் 12 தொடக்கம் 20 வயதிலான பல இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து வைத்திருந்தாராம். யாராவது ஒரு இளவரசனைக் கொல்லத் தயாராகும் போது, தான் தெரிந்தெடுக்கும் இளைஞனை அழைத்து தோளில் தட்டிக் கொடுத்து கொன்றுவிட்டு வெற்றியோடு திரும்பிவா. இங்கு உனக்காகக் காத்திருக்கும் தேவதூதர்கள் உன்னைப் பரலோகத்துக்கு அழைத்துச் செல்வார்கள் என உற்சாகப்படுத்தி இவர் அனுபபுவதுண்டு என்கிறது இவரது குறிப்பு.

இவர்களுக்கெல்லாம் அப்பால் மேம்பட்ட ஒப்பற்ற தியாக அர்ப்பணிப்புடன் தமது இலட்சிய இலக்கினை எட்ட, போராடி தம் இன்னுயிரை இழந்து முழு உலகமும் வியப்பில் உறைந்து போகுமளவுக்கு மாவீரர்களாக இன்று புஷ்பாஞ்சலிகளுடன் துயில் கொள்ளும் நமது போராளிகளும் ஒளிர்கின்றார்கள். நமது மண்ணின் பிரச்சினைகளை இன்று உலகறிந்த பிரச்சினைகளாக்கி இருப்பதற்கு இவர்களின் மரணங்கள் நிறையவே கைகொடுத்துள்ளன. நான்கு சுவர்களுக்குள் நடந்த தமிழ் மக்கள் மீதான சிங்கள அரசின் வெறித் தாண்டவம், நானிலம் தெரிந்த விடயங்களாகி விட்டன. அரசு மூடி மறைத்த மிருகததனமான நிகழ்வுகள் இன்று பகிரங்க நிகழ்வுகளாகி விட்டன.


எனவே, இவர்களின் மரணங்களை நாளைய தமிழ் ஈழத்துக்கு மனமுவந்து அளித்த, அளித்துவரும் நன்கொடைகள் என்றே எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எந்தப் பரிசுப் பொருளோடும் ஒப்பீடு செய்ய முடியாத வகையில் தமது விலைமதிப்பற்ற உயிர்களை வாரி வழங்கிய அந்த வளளல்களை, மண்ணின் மைந்தர்களை நினைவுகூர்ந்து வாயார வாழ்த்துவோம். புஷ்பாஞ்சலி செய்வோமாக. ❋


**ஏ.ஜே.ஞானேந்திரன்**

# தேசியத் தலைவரின் பிறந்த நாள் நிகழ்வுகளிலிருந்து...


யாழ்.நகரில் தேசியத் தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு நடத்தப்பட்ட பொங்கல்.


வல்வெட்டித்துறையில் தேசியத் தலைவர் பிறந்த வீட்டில் வெட்டப்பட்ட 51கிலோ எடையுள்ள பிறந்த நாள் கேக்.


வல்வையில் தேசியத் தலைவரின் உருவப் படத்தைத் தாங்கிய ஊர்தி இராணுவ காவலரணைக் கடக்கிறது.



வல்வையில் தேசியத் தலைவரின் உருவப்படத்துடன் அணிவகுத்துச் செல்லும் துணைப்படை வீரர்கள்.


வல்வையில் நடந்த பிறந்த நாள் நிகழ்வில் பங்கேற்ற பொதுமக்கள்


வல்வையில் நடந்த பிறந்த நாள் நிகழ்வில் பங்கேற்ற பொதுமக்கள்


வல்வை நிகழ்வில் தேசியக் கொடி ஏற்றப்படுகிறது.


வல்வையில் பிறந்த நாள் கேக் வெட்டப்படுகிறது.


51 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கொளுத்தப்பட்ட பட்டாசு

## தமிழ்நாட்டில் துயரம்

# வெள்ளத்தில் சிக்கியது பயணிகள் பஸ்; 145 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!

சென்னை —

தமிழ்நாட்டில் தஞ்சாவூர் - இராமநாதபுரம் மாவட்டங்களில் காட்டாற்று வெள்ளத்தில் சிக்கி இரண்டு பயணிகள் பஸ்கள் கவிழ்ந்ததில் 145 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கிக்கு நேற்று முன்தினம் மதியம் பயணிகள் பஸ் சென்றுகொண்டிருந்தது. பட்டுக்கோட்டையிலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மகாராஜ சமுத்திரம் ஆற்றைக் கடக்க முயன்ற போது அந்த தனியார் பஸ் கடும் வேகத்தில் சென்றுகொண்டிருந்த காட்டாற்று வெள்ளத்தில் சிக்கியது.

தரைப் பாலம் பகுதியில் தண்ணீர் கொஞ்சமாகத்தானே உள்ளது என்ற தவறான கணிப்பு காரணமாக சாரதி பஸ்ஸை செலுத்தினார். பாலத்தின் முக்கால் பகுதியைக் கடந்துவிட்ட நிலையில் திடீரென வெள்ளத்தின் வேகத்தால் பஸ் ஒரு பக்கமாக இழுத்துச் செல்லப்பட்டு கவிழ்ந்தது.

தரைப்பாலத்தில் ஆங்காங்கே ஏற்பட்டிருந்த பள்ளம் காரணமாக பஸ் பல தடவை உருண்டது. பஸ்ஸை சுமார் 50 அடி தூரத்துக்கு காட்டாற்று வெள்ளம் இழுத்துச் சென்றது. வாசல் ஓரம் நின்றவர்கள் தண்ணீரில் குதித்து உயிர் தப்பினார்கள். அந்த வகையில் பஸ்ஸில் பயணம் செய்தவர்களில் 22 பேர் மட்டுமே உயிர் பிழைத்தனர்.

மற்றைய அனைத்துப் பயணிகளும் வெள்ளத்தில் மூழ்கி உயிரிழந்தனர். நேற்றுக் காலை வரை 44 சடலங்கள் மீட்கப்பட்டன. அதில் 39 சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

இரண்டாவது சம்பவம் திருச்சியில் இடம்பெற்றது.

திருச்சியிலிருந்து ராமேஸ்வரம் நோக்கிச் சென்ற அரச பஸ் இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே கோட்டகரை சருகனி ஆற்றின் குறுக்கே பாலத்தைக் கடக்க முயன்றபோது காட்டாற்று வெள்ளத்தில் சிக்கிக்கொண்டது.

வெள்ளத்தின் பிடியில் சிக்கிய பஸ்ஸை கரைபுரண்ட வெள்ளம் புரட்டித்தள்ளியது. பஸ்ஸில் பயணம் செய்த பயணிகள் அனைவரும் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டனர்.

பஸ்ஸில் சுமார் 80 பேர் பயணம் செய்தனர். அதில் 15 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டனர். மீதமுள்ள 65 பேர் பலியாகிவிட்டனர். நேற்றுக் காலை வரை சுமார் 30 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்திய கடற்படையினரின் ஹெலிகொப்டர் வரவழைக்கப்பட்டு தேடும் பணி முழு வீச்சில் நடந்துவருகிறது.

உலக நோக்கு

# பூமியில் ஏற்பட்ட வெப்பநிலை மாற்றமே புயல் மற்றும் மழைக்கு காரணம்!

## விஞ்ஞானிகள் தெரிவிப்பு

வொஷிங்ரன் —

ஓசோன் படலத்தில் ஓட்டை மற்றும் பூமியின் வெப்பம் அதிகரித்துள்ளதால் உலகம் முழுவதும் புயல் மற்றும் மழை - அதனால் வெள்ளப்பெருக்கு என்பன ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக உலகம் முழுவதும் புயல் மற்றும் மழை அதனால் வெள்ளப்பெருக்கு என இயற்கை அழிவு பாரியளவில் இடம்பெற்றுவருகின்றது. இது குறித்து அமெரிக்க விஞ்ஞானிகள் ஆய்வு நடத்தியபோது பல அதிர்ச்சியளிக்கும் தகவல்கள் கிடைத்துள்ளன.

நாம் பயன்படுத்தும் எரிபொருட்களால் காற்று மண்டலத்தில் உள்ள ஓசோன் படலத்தின் ஓட்டை ஏற்பட்டு சூரியனின் வெப்பம் பூமியை அதிகமாகத் தாக்குவதாக ஏற்கனவே விஞ்ஞானிகள் ஆராய்ந்து தெரிவித்திருந்தனர்.

இதன் காரணமாக அந்தாட்டிக்காவில் உள்ள பனிப் படிவங்கள் மற்றும் இமயமலை போன்ற பகுதிகளில் படிந்திருக்கும் பனிகள் உருகி கடல் மட்டம் உயரும். இதனால் பல தீவுகள் மூழ்கிவிடும். கடற்கரைப் பகுதிகளும் அழியும் என்று அவர்கள் தெரிவித்திருந் தனர். இப்போது ஏற்படும் புயல் மற்றும் மழைக்கு கூட இந்த வெப்பநிலை மாற்றம்தான் காரணம் என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

பூமியில் வெப்பம் அதிகரித்து இருப்பது கடல் பகுதியையும் பாதித்துள்ளது. அதாவது 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கடல் பகுதியில் 0.5 டிகிரி வெப்பம் அதிகரித்துள்ளது. எனவே கடலில் இருந்து தண்ணீர் ஆவியாவது அதிகரித்துள்ளது.

அவை மேக கூட்டமாக உருமாறி காற்றழுத்தத்தை உருவாக்குகின்றன. அதன் மூலம் புயல் ஏற்பட்டு மழை கொட்டுகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். தண்ணீர் அதிகமாக ஆவியாவதால் அந்த புயல்களின் வீரியமும் அதிகமாக இருப்பதாக அவர்கள் சொல்கின்றனர்.

உலகின் வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருவதால் இனி இதுபோன்ற புயல்களையும் வெள்ளத்தையும் அடிக்கடி சந்திக்க வேண்டிவரும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஆனையிறவு நினைவாலயத்தில் இன்று விசேட நிகழ்வுகள்!

கிளிநொச்சி —

ஆனையிறவில் விசேடமாக அமைக்கப்பட்டிருக்கும் மாவீரர் நினைவாலயத்தில் இன்று விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளில் -

காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை இடம்பெறவுள்ள நிகழ்வில் நடனம், சிறப்புரை, நாடகம், சங்கநாதம் என்பன இடம்பெறவுள்ளன. பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இடம்பெறவுள்ள கலைநிகழ்வுகளில் மாவீரர் நினைவு நடனம், சிறப்புரை, பேச்சு, கவிதை, நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

இரவு நிகழ்வுகள் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை, மணியொலித்தல், சுடரேற்றல், அகவணக்கம், மாவீரர்நாள் நினைவு நடனம், மாலதி படையணிப் போராளிகளின் 'தரையிறங்கியா தடுத்தாய் அன்று நாமும் தரையிறங்கியே ஆனையிறவைப் பிடித்தோம் இன்று' எனும் தலைப்பிலான கவியரங்கம், நாட்டிய நாடகம், நவம் அறிவுக்கூடப் போராளிகளின் இசைக்கானம் என்பன இடம்பெறவுள்ளன.

# வாழைச்சேனையில் சூடு இளைஞர் படுகாயம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - வாழைச்சேனையில் வெள்ளைவான் ஒன்றில் வந்தோர் இளைஞர் ஒருவரைக் கடத்திச் செல்ல முற்பட்டபோது - அது பலனளிக்காது போகவே துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று நண்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

சுகந்தகுமார் செல்வரட்ணம் என்ற 24 வயதுடைய இளைஞரையே வெள்ளைவான் ஒன்றில் வந்தோர் கடத்திச்செல்ல முயன்றனர். ஆனால், அவர் தப்பி ஓடிவிடவே ரி-56 ரகத்துப் பாக்கியால் சுட்டுவிட்டு அவரது மோட்டார் சைக்கிளையும் எடுத்துச் சென்றுவிட்டனர்.

இந்தச் சம்பவத்தில் நெஞ்சு, தலை ஆகிய இடங்களில் படுகாயமடைந்த மேற்படி இளைஞர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

## சந்திரிகாவுக்கான

# அணிவகுப்பு மரியாதை மீண்டும் ஒத்திவைப்பு!

கொழும்பு —

ஜனாதிபதி பதவியிலிருந்து விலகும் சந்திரிகா குமாரதுங்கவுக்கான இராணுவ இறுதி மரியாதை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இராணுவ மரியாதை நடைபெறக்கூடிய இராணுவ மைதானம் அடைமழை காரணமாக சேதமடைந்திருப்பதால் இந்த நிகழ்வு அடுத்த வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய மற்றும் முன்னாள் ஜனாதிபதிகள் இருவருக்கும் 21 குண்டுகள் முழங்க இராணுவ மரியாதை அளிப்பது இலங்கை நடைமுறையில் உள்ள ஒன்று.

கடந்த புதன்கிழமை இந்த நிகழ்வு நடைபெற இருந்தது. இதற்காக சந்திரிகாவும் காத்திருந்தார். ஆனால், மழையின் காரணமாக இறுதி நேரத்தில் இந்நிகழ்வு ரத்துச் செய்யப்பட்டதால் ஆத்திரமடைந்த சந்திரிகா குமாரதுங்க தனது செயலகத்தின் பின் கதவு வழியே கோபத்துடன் சென்றுவிட்டார்.

அதேவேளை, சந்திரிகாவுக்கான புதிய இல்லம் புதுப்பிக்கப்பட்டு வருவதால் ஜனாதிபதி மாளிகையிலேயே இதுவரை சந்திரிகா தங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எழுவைதீவு கடற்பரப்பில்

# கடற்படையினரின் தாக்குதலில் இரண்டு மீனவர்கள் காயம்!

யாழ்ப்பாணம் —

எழுவைதீவு கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நீருந்து விசைப்படகில் வந்த கடற்படையினர் மோசமான முறையில் தாக்கியதில் இரண்டு மீனவர்கள் காயமடைந்தனர்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் இடம்பெற்றது. இது குறித்து தெரியவருவதாவது -

எழுவைதீவு வடக்கு கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது எதுவித விசாரணைகளையும் மேற்கொள்ளாமல் விசைப்படகில் வந்த கடற்படையினர் மிக மோசமாக தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் சகோதரர்கள் இருவர் காயமடைந்தனர். மீன்பிடிக்க கடலுக்குச் செல்வதாயின் தம்மிடம் வந்து பாஸ் அனுமதியை பெற்றபின்னரே மீன்பிடிக்க அனுமதிக்க முடியுமெனவும் கடற்படையினர் எச்சரிக்கை விடுத்தனர்.


இந்தச் சம்பவம் மீனவர் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

எழுவைதீவு கிராமத்தின் முக்கிய தொழிலாக மீன்பிடித் தொழில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ காலநிலை அவதானிப்பு நிலையம் கிளிநொச்சியில் திறந்துவைப்பு!





கிளிநொச்சி —

தமிழீழ காலநிலை அவதானிப்பு நிலையம் கிளிநொச்சி - அறிவியல் நகரில் நேற்று மாலை திறந்துவைக்கப்பட்டது. நேற்று மாலை 4.30 மணியளவில் தமிழீழ நிர்வாகசேவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் ஆரம்பத்தில் முதன்மைச் சுடரை தமிழீழ மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சுகுணன் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றி வைத்தார்.

காலநிலை அவதானிப்பு நிலைய அலுவலகத்தை - இதன் உருவாக்கத்தில் பெரும் பங்காற்றிய புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வசித்து வரும் குகதாசன் கண்ணன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

காலைநிலை அவதானிப்பு நிலையத்தை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நாடாவை வெட்டித் திறந்து வைத்ததுடன் காலநிலை அவதானிப்பு நிலையத்தின் கருவிகளை இயக்கி வைத்தார்.

அரங்க நிகழ்வுகள் தமிழீழ நிர்வாகசேவையைச் சேர்ந்த சின்னப்பா மாஸ்ரர் தலைமையில் இடம்பெற்றன.

கரைச்சி பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன், பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சுகுணன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இந்தக் காலநிலை அவதானிப்பு நிலையம் எதிர்காலத்தில் தமிழர் தாயகத்தில் ஏற்படும் காலநிலை மாற்றங்களையும் இயற்கை அனர்த்தங்களையும் அறிந்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் மையமாகச் செயற்படும்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி தாயகத்தைத் தாக்கிய சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களை குறைந்தது இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னரே அறிந்து மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதற்கு வழிவகைகளை ஏற்படுத்தும்.

பூமி அதிர்ச்சி, சூறாவளி போன்ற இயற்கையின் சீற்றங்களையும் அவதானித்து மக்களை விழிப்படைச் செய்யும் பணிகளையும் இந்த அவதானிப்பு நிலையம் மேற்கொள்ளும்.

## முகாம்களை...

மேற்கொள்ளுமாறு கிழக்கு மற்றும் வன்னி இராணுவ கட்டளைப்பீடங்களுக்கு இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

ஆயுதங்களின்றியும், பாதுகாப்பின்றியும் பயணம் செய்யும் படையினர் மீது விடுதலைப் புலிகள் கைக்குண்டுகள், சிறியரக ஆயுதங்கள் மற்றும் நவீனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதலை நடத்த திட்டமிட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து இராணுவ பிரிவின் கட்டளை அதிகாரிகளுக்கும் தெரிவித்துள்ளதாகவும், எனவே இதுகுறித்து எடுக்கவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

## இன்று....

தொடர்ந்து துயிலுமில்லங்களில் மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் ஈகச்சுடரேற்ற - வீடுகள், பொது இடங்களிலும் சுடர் ஏற்றி மாவீரர்கள் நினைவு கூரப்படுவர்.

பொது இடங்களில் பெரிய சுடர்களை ஏற்றியும் - வீடுகளில் தீப்பந்தங்கள், சுட்டிவிளக்குகள் ஏற்றியும் மாவீரர்களை நினைவுகூருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி எள்ளங்குளம், கொடிகாமம், தீவகளில் சாட்டி, கோப்பாயிலும், உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லங்களில் - மாவீரர்நாள் சிறப்புடன் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவீரர்களின் பெற்றோர்கள் துயிலுமில்லங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவீரர் நாளை முன்னிட்டு தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு மாவீரர் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு எழுச்சிக்கோலம் பூண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளின்...

உரிமை பாதுகாப்பு நிலைப்பாடுகள் உள்ளிட்ட மிகவும் தீர்க்கமானதொரு கட்டத்தில் இம்முறை மாவீரர்நாள் உரை வெளிவரவுள்ளது.

இந்த உரையில் தமிழ் மக்களின் எதிர்கால நகர்வுகள் குறித்த முடிவை தேசியத் தலைவர் அறிவிப்பார் என்ற எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

இதனால் தமிழ் மக்கள் மட்டுமன்றி - தென்னிலங்கை சிங்கள மக்கள், இலங்கை அரசு மற்றும் சர்வதேச சமூகம் என அனைத்துத் தரப்பினருமே இந்த உரையை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

இன்று மாலை 5.32 மணிக்கு தேசியத் தலைவரின் உரை புலிகளின்குரல் வானொலி, தமிழீழ தேசியத் தொலைக்காட்சி, ரி.ரி.என் தொலைக்காட்சி ஆகியவற்றில் நேரடி ஒலி, ஒளிபரப்பாகும்.

தமிழர் தாயகத்தில் உள்ள மக்கள் தமிழீழ தேசியத் தொலைக்காட்சிமூலம் இன்று மாலை 5.30 மணி முதல் தேசியத் தலைவரின் உரை மற்றும் மாவீரர் நாள் நிகழ்வுகளைப் பார்க்கமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோலாகலமாக...

கடற்புலிகளின் துனைப்படையின் அணிவகுப்புடன் தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப்படம் தாங்கியவாறு மக்கள் பேரணியாக அம்மன் கோயிலடிக்கு அண்மையில் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் ஒன்றுகூடினர்.

இதனைத் தொடர்ந்து அங்கு பொதுச்சுடரை யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சங்க சம்மேளன செயலாளர் சூரியகுமார் ஏற்றிவைத்தார்.

தேசியக் கொடியை கடற்புலிகளின் வலி.வடக்கு துணைப்படைப் பொறுப்பாளர் ஜஸ்ரின் குரூஸ் ஏற்றினார்.

பின்னர் தேசியத் தலைவரின் வீட்டுக்குச் சென்று 51 கிலோ கிராம் நிறையுடைய கேக்கை புலிபோன்று வேடம் தரித்த சிறுவன் ஒருவன் வெட்டி அங்கிருந்தவர்களுக்கு வழங்கினான்.

அந்த நிகழ்வில் பலநூற்றுக் கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்தநாளையொட்டி உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் ந.கண்ணன் ஏற்றிவைத்து மாவீரர் லெப்.சங்கரின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்தார்.

அதைத் தொடர்ந்து 10 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் தேசியத் தலைவரின் பிறந்த தினத்தை முன்னிட்டு பொதுமக்கள் பொங்கல் செய்து அப்பகுதியால் சென்றோருக்கு அவற்றை வழங்கி மகிழ்ந்தனர்.

நேற்றுக்காலை 11 மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இளைஞர் குழுக்கள் பொங்கலுடன் 51 என்ற இலக்கத்தை பட்டாசுமூலம் வடிவமைத்து கொளுத்தி மகிழ்ச்சியைக் கொண்டாடினர்.

அடுத்து பொது இடங்கள், பிரதான சந்திகள், பஸ்ஸில் பயணம் செய்வோருக்கு இனிப்புப் பண்டங்களை வழங்கினர்.

மீசாலை பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து நேற்றுக்காலை 9 மணிக்கு மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய முன்றலில் விசேட பொங்கலும் விசேட பூசையும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மீசாலை பொது அமைப்பைச் சேர்ந்தோர் பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

கோண்டாவில் தில்லையம்பதி சிறி சிவகாமி அம்மன் ஆலயம், கோண்டாவில் சாமுண்டாதேவி சிறி ஞானவைரவர் ஆலயம் ஆகியவற்றில் மாலை 5 மணியளவில் விசேட பூசைகள் இடம்பெற்றன.

இந்தப் பகுதியில் உள்ள சனசமூக நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்களில் பிறந்த நாள் கேக் வெட்டியும் இனிப்புப் பண்டங்கள் பரிமாறியும் மகிந்தனர்.

இதேவேளை - கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மட்டக்களப்பு அம்பாறை திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் தேசியத் தலைவரின் பிறந்தநாள் நிகழ்வுகள் குதூகலமாகக் கொண்டாடப்பட்டன.

இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பூசைகளுடன் 52 பானைகளில் பொங்கல் செய்து உண்டுமகிழ்ந்தனர். பிறந்த தினத்தன்று பிறக்கும் குழந்தைகளுக்கு வங்கிகளில் பணம் வைப்புச்செய்து சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பிறந்த தின நிகழ்வை முன்னிட்டு பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (25, 38, 12, 82)

## படைக்கட்டமைப்பில்...

பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு ஆலோசகராக ஓய்வுபெற்ற இராணுவ ஜெனரல் எம்.டி.பெர்னாண்டோ நியமிக்கப்படவுள்ளார்.

அத்துடன், இராணுவ புலனாய்வுப் பிரிவு இயக்குனர் பிரிகேடியர் ரிஸ்வி சக்கியையும் பதவியிலிருந்து அகற்றிவிட்டு தகுதிவாய்ந்த வேறொரு அதிகாரியை நியமிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதான புலனாய்வுப் பிரிவான உள்நாட்டு புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் சபைத் தலைவரான பிரதி பொலிஸ் மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க தொடர்ந்தும் அப்பதவியை வகிப்பார்.

எனினும், வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் சபைத் தலைவரான பிரதி பொலிஸ் மா அதிபர் ரி.வி.சுமனசேகர தனது பதவி விலகல் கடிதத்தை ஏற்கனவே பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பியுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் பதவியில் மாற்றங்கள் ஏற்படுமாயின் விக்டர் பெரேரா மற்றும் ஜயந்த விக்கிரமரத்ன ஆகிய இருவரில் ஒருவருக்கு அந்தப் பதவி கிடைப்பதற்கு வாய்ப்பிருப்பதாகத் தெரியவருகிறது.

இதில் ஒரு பிரதி பொலிஸ் மா அதிபரிடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா என்பது குறித்து ஆராயுமாறு தனிப்பட்ட ரீதியில் மகிந்த ராஜபக்ஷ உத் தரவிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த விசாரணையின் பின்னர் கிடைக்கும் அறிக்கைக்கமைய பொலிஸ் மா அதிபர் பதவி யில் மாற்றங்கள் ஏற்படுமா இல்லையா என்பது பற்றிய முடிவெடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.11.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் மாவீரர் நாளை முன்னிட்டு கவிதைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், தமிழீழத் தேசியத் தலைவரின் 51 ஆவது பிறந்தநாள் நிகழ்வும் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் - தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளப் கண்ணன் ஏற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்களையும், வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ் வழங்குவதையும், படங்களில் காணலாம்.

# JANASHAKTHI

உயரச் சிறகடிப்போர்



இலங்கையின் முதல்தர காப்புறுதிக் கம்பனியாக விளங்குவதே எங்களின் நோக்கு. இந்த நோக்கை நாம் பின்பற்றுவதன் ஆர்வம் இன்று வரை நாங்கள் எய்திய பெறுபேறுகளினால் நன்கு அறியப்பட்டுள்ளது.

இலங்கையில் இத்துறையில் உள்ளோர் அனைவரையும் விஞ்சி ஒரு குறுகிய பத்து வருட காலத்தினுள் 300 கோடிக்கு மேல் வருடாந்த கட்டுப்பண வருமானத்தை சம்பாதிக்கும் ஒரேயொரு காப்புறுதிக் கம்பனி எம்முடையதே. அத்துடன் நடப்பு ஆண்டு முடிவில் 400 கோடியை எய்தும் பாதையில் நன்கு முன்னேறுகின்றோம்.

இது முதலாவதுகாக வரவேண்டும் எனும் சவாலை ஏற்கும் ஆர்வம் பற்றியது. **உயரச் சிறகடிப்போர்** எம்மை அங்கு கொண்டு செல்ல உள்ளனர். அதை அடைய எது தேவையோ அதை நீர் கொண்டிருப்பின் நாம் எப்பொழுதும் உமக்காக ஓரிடத்தை கொண்டிருக்கிறோம்.

## வடக்கு/கிழக்கு கிளை அலுவலகங்களில் உள்ள வெற்றிடங்கள்

### காப்புறுதி உதவியாளர்கள்

23 வயதுக்கு மேற்பட்டவராகவும், க.பொ.த உயர்தர பரீட்சையில் குறைந்தது 2 பாடங்களில் சித்தியும் க.பொ.த சாதாரணப் பரீட்சையில் கணிதம், ஆங்கிலம், ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். பொது மற்றும்/அல்லது ஆயுட்காப்புறுதியில் அனுபவம் விரும்பத்தக்கது. எனினும் அது முக்கியமானதல்ல.

### காப்புறுதி நிறைவேற்று அதிகாரிகள்

25 வயதுக்கு மேற்பட்டவராகவும் பொது மற்றும்/அல்லது ஆயுட் காப்புறுதியில் 3-5 ஆண்டு அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும். காப்புறுதிக் கோட்பாடுகள், செயற்பாடுகள் பற்றிய அறிவும் காப்புறுதி உரிமைக் கோரிக்கை என்பவற்றை கையாளக் கூடிய திறனும் விரும்பத்தக்கது. விரும்பத்தக்க விண்ணப்பதாரர் வாடிக்கையாளர் சேவைக்கான விருப்பையும் சிறந்த மக்கள் தொடர்பாடல் திறனையும் நீண்ட மணித்தியாலங்கள் சேவையாற்ற தயாராகவும் தேவைப்படின் சுழற்சி முறையில் சேவையாற்ற தயாராக இருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் எழுதவும் பேசவுமான சிறந்த தொடர்பாடல் திறன் அத்தியாவசியமானது.

க.பொ.த உயர்தரத்தில் குறைந்தது 02 சித்திகளும், க.பொ.த சாதாரணப் பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் மட்டக்களப்பு, கல்முனை, வாழைச்சேனை, அக்கரைப்பற்று, திருகோணமலை, கந்தளாய், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுன்னாகம், நெல்லியடி, கிளிநொச்சி, மன்னார் வவுனியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது கிளைகளில் காணப்படுகின்றன.

ஆயுட்காப்புறுதி, அறுவைச் சிகிச்சை, மற்றும் மருத்துவமனைப்படுத்தல் காப்புறுதி, உயர் தொழில்சார் கல்விக்கான உதவி உட்பட தொழிற்போட்டிசார் ஊதியமும் மற்றைய அனுகூலங்களும் வழங்கப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள எந்தவொரு வெற்றிடத்திற்கும் நீங்கள் தகுதியுடையோரெனக் கருதுவீராயின் உங்களது கல்வித் தகமைகள் அடங்கிய சுய விபரக் கோவைகளை கீழ்க்காணும் விலாசத்திற்கு உறவினரல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் உங்களது தொலைபேசி இலக்கம் என்பன சகிதம் 09.12.2005 திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத் தக்கவாறு அனுப்பி வைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் தகமைகளும் திறனும் அற்றவர்கள் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.**

Q&E

Sr. Manager - Human Resource Development
**JANASHAKTHI INSURANCE CO. LTD.,**
3rd Floor, Access Towers
278, Union Place, Colombo 02.

JANASHAKTHI
INSURANCE

(நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிதனையும் அத்துடன் தொழில் புரிய விரும்பும் பிரதேசத்தினையும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையிற் குறிப்பிடவும்)

# JANASHAKTHI

## பெறுபேறெய்துவோர்



இலங்கையின் முதல்தர காப்புறுதிக் கம்பனியாக விளங்குவதே எங்களின் நோக்கு. இந்த நோக்கை நாம் பின்பற்றுவதன் ஆர்வம் இன்று வரை நாங்கள் எய்திய பெறுபேறுகளினால் நன்கு அறியப்பட்டுள்ளது.

இலங்கையில் இத்துறையில் உள்ளோர் அனைவரையும் விஞ்சி ஒரு குறுகிய பத்து வருட காலத்தினுள் 300 கோடிக்கு மேல் வருடாந்த கட்டுப்பண வருமானத்தை சம்பாதிக்கும் ஒரேயொரு காப்புறுதிக் கம்பனி எம்முடையதே. அத்துடன் நடப்பு ஆண்டு முடிவில் 400 கோடியை எய்தும் பாதையில் நன்கு முன்னேறுகின்றோம்.

இது முதலாவதுகாக வரவேண்டும் எனும் சவாலை ஏற்கும் ஆர்வம் பற்றியது. பெறுபேறெய்துவோர் எம்மை அங்கு கொண்டு செல்ல உள்ளனர். அதை அடைய எது தேவையோ அதை நீர் கொண்டிருப்பின் நாம் எப்பொழுதும் உமக்காக ஓரிடத்தை கொண்டிருக்கிறோம்.

## வடக்கு/கிழக்கு கிளை அலுவலகங்களில் உள்ள வெற்றிடங்கள்

### வியாபார விருத்தி நிறைவேற்று அதிகாரிகள்

கணிதம் உட்பட க.பொ.த சாதாரணப் பரீட்சையில் 06 பாடங்களிற் சித்தியும், 21 வயதுக்கு மேற்பட்டவராகவும், குறைந்தது 2 - 3 வருடங்கள் விற்பனை அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும். க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் அது மேலதிகத் தகைமையைகாகக் கருதப்படும்.

### வியாபார விருத்தி அலுவலர்கள்/ உதவியாளர்/விற்பனை மேற் பார்வையாளர்கள்

கணிதம் உட்பட க.பொ.த சாதாரணப் பரீட்சையில் 06 பாடங்களிற் சித்தியடைந்தவராகவும் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். விற்பனை அனுபவம் அவசியமற்றது. மேற்படி சகல பதவிகளுக்கும் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு ஆயுட்காப்புறுதி அறுவைச் சிகிச்சை மற்றும் மருத்துவமனைப்படுத்தல் காப்புறுதி, உயர் தொழில்சார் கல்விக்கான உதவி உட்பட தொழிற்போட்டிசார் ஊதியமும் மற்றைய அனுகூலங்களும் வழங்கப்படும்.

### பிரதேச பிரதிநிதிகள்

இது வரையறையற்றதோர் வருமானத்தைத் தரவல்ல சந்தர்ப்பமாகும். வருமானத்தை வரையறைக்கு உட்படுத்த விரும்பாத தனிப்பட்ட கடின உழைப்பாளிக்கு இது உகந்தது. நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், க.பொ.த சாதாரணப் பரீட்சையில் ஒரே தடவையில் கணிதத்தில் சாதாரண சித்தியுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கணிதத்தில் சித்தி இன்றேல் 5 வருடக் காப்புறுதி முகவராக அனுபவமுடையவர்களினது விண்ணப்பங்களும் சாதகமாகப் பரிசீலிக்கப்படும்.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் மொழியில், எழுதுவதிலும் உரையாடுவதிலும் சிறந்த தேர்ச்சியுடையவராகவும் இருத்தல் வேண்டும். வாடிக்கையாளர் சேவையில் நாட்டமுடையவராகவும் இருத்தல் அவசியமாக இருப்பதுடன், நீண்ட மணிநேர வேலை புரிய அர்பணிப்புடையவராகவும் இருப்பதுடன் காப்புறுதியை முழுநேர அல்லது பகுதி நேர தொழிலாகப் புரிய ஆர்வமுடையவராகவும் இருத்தல் அவசியம். காப்புறுதித் துறையில் உயர் பதவி வகிக்கும் நிபுணத்துவத் தகுதிபெற நிறுவனமே உங்களது திறன்களை மேம்படுத்த வழிவகுக்கும்.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் மட்டக்களப்பு, கல்முனை, வாழைச்சேனை, அக்கரைப்பற்று, திருகோணமலை, கந்தளாய், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, சுன்னாகம், நெல்லியடி, கிளிநொச்சி, மன்னார் வவுனியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது கிளைகளில் காணப்படுகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள எந்தவொரு வெற்றிடத்திற்கும் நீங்கள் தகுதியுடையோரெனக் கருதுவீராயின் உங்களது கல்வித் தகமைகள் அடங்கிய சுய விபரக் கோவைகளை கீழ்க்காணும் விலாசத்திற்கு உறவினரல்லாத இருவரின் பெயர்கள் மற்றும் உங்களது தொலைபேசி இலக்கம் என்பன சகிதம் 09.12.2005 திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத் தக்கவாறு அனுப்பி வைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் தகமைகளும் திறனும் அற்றவர்கள் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.**

Sr. Manager - Human Resource Development
**JANASHAKTHI INSURANCE CO. LTD.,**
3rd Floor, Access Towers
278, Union Place, Colombo 02.

JANASHAKTHI
INSURANCE

(நீங்கள் விண்ணப்பிக்கும் பதவித்தனையும் அத்துடன் தொழில் புரிய விரும்பும் பிரதேசத்தினையும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையிற் குறிப்பிடவும்)

## சின்னஞ்சிறு செய்திகள்

### செம்பியன்பற்று உப பணிமனைக்கு மலக்கழிவு அகற்றும் வாகனம்

செம்பியன்பற்று—

வடமராட்சி கிழக்கு இடைத்தங்கல் முகாம்களிலுள்ள மலசலக்கூடக் குழிகளின் சுத்திகரிப்புக்காகப் புதிய மலசலக்கூடக் கழிவு அகற்றும் வாகனம் ஒன்று செம்பியன்பற்று உபபணிமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலம் நிலவியுள்ள இதுதொடர்பான பிரச்சினைக்கு இதன்மூலம் தீர்வு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வீதித்தடையால் மக்கள் அசௌகரியம்

வவுனியா—

இராணுவத்தினரால் தாண்டிக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீதித்தடையால் ஓமந்தை மக்கள் - இரவு நேரப் பயணங்களின்போது பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

கடும்மழை, வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டுள்ள இந்தவேளையில் - அடிப்படைத் தேவையைக்கூட நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வவுனியா நகர்ப்பகுதியில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டுவிட்டு திரும்பிய ஓமந்தைப் பகுதி மக்கள் இந்த வீதித்தடை காரணமாகத் தமது வீடுகளுக்குச் செல்லமுடியாது உறவினர் வீடுகளில் தங்க நேரிட்டமை குறிப்பிடத்தக்கது.

### கடற்தொழில் உபகரணங்கள் வழங்கல்

சுதுமலை—

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் சுழிபுரம் கடற்தொழிலாளர்களுக்கு படகுகள் வழங்கப்பட்டுள்ளது என நிறுவனத்தின் இயக்குநர் அருட்திரு தி.யோ.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சுழிபுரம் கலைமகள் கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களில் 26 பேருக்கு இந்த மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத் தலைவர் க.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -

13 மீன்பிடிக் கண்ணாடி இழைப்படகுகள், 13 வெளியிணைப்பு இயந்திரங்கள், மீன்பிடி வலைத் தொகுதிகள் ஆகியன வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட கூட்டுறவு ஆணையாளர், கூட்டுறவுப் பரிசோதகர்கள், கடற்தொழிலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (91)


### வீதி புனரமைப்பு

இருபாலை—

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாத இருபாலை கிழக்கு சி.சி.தமிழ்க் கலவன் பாடசாலை வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதுவரை காலமும் மிகவும் கஷ்டப்பட்டு போக்குவரத்தை மேற்கொண்டு வந்த மக்கள் இந்த வீதி புனரமைக்கப்படுவதனால் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

வலிகிழக்கு பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்த வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (63)


மாவீரர் நாள் 2005
ஓ எங்கள் மாவீரர்களே!
வானம் வியந்தது - உங்கள்
வீரத் திறன் கண்டு.
தேசம் வியர்த்தது
தியாகத் திறன் கண்டு.
காகம் கரைந்தது
விடிவு வந்ததென்று.
கானம் இசைத்த(து) குயில்
வசந்தம் பிறந்ததென்று.
தோகை விரித் தெழில்
மயிலும் ஆடியது.
எங்கள் மாவீரர்களே!
காலத்தை மாற்றிய கலைஞர்களே
ஞாலத்தை உலுப்பிய வெடியோசையுள்
ஓலமிட்டது பகை முகாம்கள்
ஓடியது மீதி உயிர் காத்து
இருளிலும் ஊடுருவிய
ஒளி முகங்கள்
தேடிப் பகையழித்த பொழுதுகளில்
தமிழன் கரங்கள் ஒலித்தன
ஆனால் நீங்களோ
படமாகிப் போனீர்கள்.
ஓ! எங்கள் மாவீரர்களே!
குருதியில் நனைந்த தேசம்
விடியும் வரை
விழிகள் தூங்காது
எங்களின் மண்ணில் குடியிருக்கும்
பகை வீடுகள் யாவும்
பற்றி எரியும்
சிங்கக் கைமுனுக்கள்
சிரந் தாழ்த்தி நிற்கும்
காலத்துக்காய்
காத்திருக்கின்றோம்.
உங்கள் கனவுகளைச் சுமந்து
எங்கள் பயணங்கள் தொடரும்.
இது உறுதி.
------------- முருகு
கார்த்திகை நட்சத்திரங்கள்
கார்த்திகைக் காலம்
நட்சத்திரங்கள் விழித்திருக்கும்...!
கார்த்திகைப் பூக்கள் (காந்தள் பூ)
கல்லறைத் தெய்வங்களுக்காய்
தூவிக்கிடக்கும்....!
காற்றின் திசைகளில்
கண்ணீர் ஊற்றெடுக்கும்...!
புயலுறுத்தும் மரங்களையும்,
ஆர்ப்பரிக்கும் ஆழ்கடலையும்,
வேர் அறுக்கும் மண்ணில்
ஒரு நிமிடம் உறங்க வைக்கும்...!
மனதோடு பேசும் - எம்
மாணிக்கங்கள்
மணியோசை மௌனத்தில்
விழித்திருப்பர்...!
கருவறையில் உதித்த
கண்மணிகளின்
திருமுகங்களைக் காண
நெய்யுருகும் வேளை
நெஞ்சைப் பிளந்து வையுங்கள்!
உங்களுக்காய் ...!
நிமிர்ந்து பேசி
மறுபடி உறங்குவர்...!
தமிழீழம் காக்க எழுந்தவர்கள்
தமிழீழ தனியரசின்
உதயத்திற்காய் எழுந்தவர்கள்
தமிழினத்தின் தேசிய வாழ்வின்
இருப்புக்காய் போராடி எழுந்தவர்கள்
ஒப்பற்ற விடுதலைக்காய்
ஒரணியில் போராடி எழுந்தவர்கள்
சுயநிர்ணய சுதந்திர உரிமைக்காய்
சுதந்திர வேட்கையுடன் போராடி எழுந்தவர்கள்
------------ ஈழத்தரசன்.

மாவீரர்களே!
உங்களுக்குப் பிடித்ததெல்லாம்
இருளும் -மழையும் -வெயிலும்
காற்றும் -புயலும் -பனியும் தான்
ஏனென்றால்
நீங்கள் எதற்கும் சாயாத சரித்திரப் புயல்கள்.
எப்போ எப்படி வீச வேண்டுமென்பதற்காய்
உங்களுக்குள்ளே பாதை போட்டவர்கள் நீங்கள்.


யா/ மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவு
சங்கங்களின் சமாசம்,
11, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


கல்லறையில் காவியமானவர்களே!
அடிவானம் இருளான போது
ஒளி கண்டோம்.
இடியோடு மழை வரினும்
அதில் நனைவோம்.
அணையாத தீபங்கள் ஒவ்வொன்றும்
வரிசைப்படி எம்மை நிலை எடுத்து
நிற்க
சத்தியம் செய்வோம்!
தமிழீழம் உங்கள் பாதையில்....

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்,
தெல்லிப்பழை.

தமிழீழ மண்ணின் காவலர்களே!
இரவோடு இரவாக
இனிமேல் ஓடவும் மாட்டோம்.
பகல் கணக்கில்
முன்னின்று கை கொடுப்போம்
எங்கள் இதயங்களுள்
நீங்கள்....


வர்த்தகர் சங்கம்,
சுன்னாகம்.



தனிமைப்பட்ட வேளையிலும்
வளரவிட்ட
விடுதலையின் கரங்கள்
ஒன்று சேர்ந்து
இன்று பலப்படுத்தி நிற்கிறது!
விடுதலையை
இழந்து நிற்பதால் தான்
எமக்கு
இழப்புகள் பெரிதாகத் தெரியவில்லை!
மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்,
மானிப்பாய்.



கல்லறையில் துயில்பவரே!
திசையற்ற எங்களுக்கு
வழிசமைத்தீர்
திசையெங்கும் கொடியுயர்த்த
உயிர் கொடுத்தீர்
கல்லறையில் கன கதைகள்
எழுதிவிட்டீர்
கண் கலங்கி நிற்பதற்கோ
எமைப் பிரிந்தீர்
வடமாகாண பேக்கரி
உரிமையாளர் சங்கம்


நீருக்குள்ளும் தீயாகிச் சென்றீர்களே!
நீங்கள் அழிந்தவர்களல்ல
எங்களுக்காய் எழுந்தவர்கள்.
அதற்கான சான்றுதான்
உங்கள் சமாதிகள்!
தாமோதர விலாஸ்
T.P: 021 222 6867
401, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



தென்றலாய் வந்து
புயலாய் மாறியவர்களே!
தேசம் காத்திடக்
காற்றோடு கலந்தவர்களே!
இன்று தீபங்களில்
உங்களைக் காண்கிறோம்
இப்பொழுது மட்டுமல்ல:
எப்பொழுதுமே..........
கண்ணுக்குக் கண்ணாய் உங்களுக்கு
கைகொடுக்கக் காத்திருக்கிறது
துஷா ஒப்ரிசன்ஸ்
544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



மாவீரர்களே!
காட்டிலும் மேட்டிலும் கரம்பையிலும்
கழிந்தது உங்கள் வாழ்வு.
வீட்டிலும் வீதியிலும் வாடியிருந்தது
உங்களைச் சுற்றிய உறவு
கழுத்தில் கட்டித் தொங்கிய நஞ்சு
உங்கள் உறவானது - அதனால்
இன்று உலகம் முழுவதும்
உங்களுக்கு உறவானது.
ஈழமலர் உங்களுக்காய் உதிர்கிறது
கல்லறைகள் மேல்....
சமுத்திரா றேட்ஸ் லிமிட்டெட்
117, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2938


மண் காத்த மாவீரர்களே!
கல்லறையில் இன்னும் நீர்
துயில்கின்றீரா?
கயவர்களை அழித்தொழிக்கப்
பயில்கின்றீரா?
வாழ்விதெல்லாம் மாயையென்று
சொல்கின்றீரா?
வழி நெடுக வரச்சொல்லி
அழைக்கின்றீரா?
உங்கள் வழியைத்தான் தேடுகின்றோம்
புறப்படுவதற்கு...
பொறுத்திருங்கள்...


வீரர்களே நீங்கள் உறங்கிய
கல்லறைகள் களையப்பட்டன.
களையப்பட்ட இடத்திலே
அவைஇன்று முளைத்திட்டன
உருவெடுத்த கல்லறையில்
மக்களால் பூமழையாம்
ஊர்ப் பறவைகள் கூடப் பூச் சொரிகிறது
தம்மினம் காத்ததிற்காய்
ஊரார்க்காய் நெருப்புக்குள்
வாழ்ந்த உன்னத மனிதர்கள்
உங்களைத் தொடர்ந்த வேங்கைகளை
எவரும் தொடமுடியா!
நயினை மைந்தன்.


தேய்ந்த பின்னும் மணக்கும் சந்தனங்கள்
பண்பான தலைவர் வழியில்
பவனி நீவிர் வந்தீரே
பாசங்களை துறந்து விட்டு
பாசறை சென்றீரே
உணர்வுகளை விழிக்க வைத்த
உயிராயுத மானிரே மாவீரரே
உங்களை எரிக்கவில்லை
எழுவீர் என்ற எண்ணத்திலே
விதைத்துள்ளோம் எழுந்திடுவீர்
உங்கள் துயிலகங்கள் எம்மை
துயிலெழ வைக்கின்றது.
உங்கள் மயானங்கள்
எம்மை மனம் மாறச் செய்கிறது
சந்தனம் போன்றவர்கள் நீங்கள்
தேய்ந்த பின்னும் மணக்கிறீர்
ஈழவர் எம் நெஞ்சங்களில்.....
அ.யோசப் அனெக்சன்


மலைகளை உடைத்த
மாமலைகளே!
அலைகளைத் தடவிய
புலியின் களே!
எதிரியை வலையினுள்
ஒடுக்கிய புலிகளே!
முடிந்திடவில்லை உங்கள் முயற்சி
ஆனாலும்.....
எங்களால் முடியும்
உங்கள் வழி தொடர....
கிளின்ரன் அந்தியகால சேவை,
548, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


வரலாறாய்ப் போனதற்காக
வருந்தவில்லை
வரலாறு முடியமுன்
மடிந்து விட்டீர்களே!
அதற்காகத்தான்
வருந்துகிறோம்.
ஆனாலும் முடிப்போம்
உங்கள் பணி
தொடர்வோம்
உங்கள் வழி!
சம்பந்தர் மொடேர்ண்
வைத்திய நிலையம்
08, இராமையா செட்டியார் தெரு,
யாழ்ப்பாணம்.

# கந்தகம் சுமந்தவர்க்காய் ஏற்றுவோம் தீபம் கோடி

சிறியதோர் தீவுதானாம்
சிங்கள இனமே மேலாம்
வறியவர் தமிழரென்று
வதைத்திட எண்ணம் கொண்டார்
உரிமைகள் கேட்கும் வேளை
உதறியே தள்ளிப் போட்டால்
பறித்திடல் ஒன்றே எங்கள்
பங்கிதில் மாற்றமில்லை.

அந்நியர் செய்துபோன
அரசியல் தவறினாலே
இந்நிலை வந்ததிங்கு
இனியும் நாம் பொறுக்கலாற்றோம்
எந்நிலை வந்துற்றாலும்
இழிநிலை தன்னை வேண்டோம்
தன்னிலை தவறிப்போகாத்
தலைவனின் வழிநாம் நிற்போம்

தலைவனின் வழியே நின்று
தருக்கரைத் களத்தில் வீழ்த்தி
விலைமதிப் பற்ற வாழ்வை
விடுதலைக் காக ஈந்து
மலைகளாய் உயர்ந்து நிற்கும்
மாண்புறு மாவீரர்கள்
நிலைதனை மனத்தில் உன்னி
நிமிர்த்துவோம் கொடிகள் கோடி

எம்மவர்க் காகத் தம்மை
இழந்திட்ட மாவீரர்கள்
தம்சுகம் சிறிதும் நோக்காத்
தற்கொடை யாளரானார்
எம்நிலம் எமக்காய் ஆக
எதிரிகள் புறமிட்டோட
கந்தகம் சுமந்தவர்க்காய்
ஏற்றுவோம் தீபம் கோடி

கடல் தரை வானமெங்கும்
கரைந்துளர் எங்கள் வீரர்
உடல்தனை இழந்தா ரன்றி
உள்ளங்கள் எங்கள் மண்ணில்
சுடர்களாய் விரிந்து தோன்றும்
சுதந்திர நாளாம் இன்று
படர் கொடிப் பூக்களாகிப்
பரவுவோம் ஈழ மண்ணில்.

-மாவன்னா.

# மாவீரர் சுவடொற்றி...

தமிழீழம் மலர தலைவன் சேனையில் சேர்ந்து
தாயக விடிவிற்காய் பகை தனை விரட்டி...
விதையாகிய எம் வீரப்புதல்வர்களே!
தமிழீழத்தை காதலித்த உங்கள் அக உணர்வையும்
தியாகத்தையும் என்றும் நாம் மறந்திடோம்.
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் – அந்த
நினைவில் உங்கள் தியாகம் கலந்திருக்கும்.

இருண்டு கிடந்த தமிழீழமதனை ஒளிபெறச் செய்த
சூரிய புதல்வர்களாய் நீங்கள் உதித்தீர்கள்.
தமிழின விடிவுக்காய் உதிர்ந்து போன உங்கள்
உடல்களை சுமக்கும் கல்லறைகளை நிலங்கள்
சுமக்கவில்லை
எங்கள் மனங்களில் தான் சுமக்கிறோம்.

வீர குழந்தைகளே! உங்கள் கல்லறைமுன்
எம் விழி நீரை எண்ணெயாக்கி விளக்கேற்றுகிறோம்
நீங்கள் விட்டு சென்ற மூச்சு காற்றுடன்
ஈழத்தின் சுதந்திரக் காற்றையும் சேர்த்து
சுவாசிப்போம்
அந்த நாள் வெகு தொலைவிலில்லை அதுவரை
உங்கள் பாத சுவடொற்றி தொடர்ந்து பயணிப்போம்.

P.சாரதி
வடலியடைப்பு.

மாவீரர் கவிதாஞ்சலி

## காவிய நாயகர்கள்

இது
கார்த்திகை மாதம்
களத்திலே காவியமாகி
கல்லறையிலே துயிலும்
காவிய நாயகர்களுக்கு
என் தேசம்
அஞ்சலி செலுத்தும் காலம்!

இவர்கள்
உறங்காத கண்மணிகள்
வாழ்நாளில் – இன்று
வெற்றி பெற்று தந்துவிட்டு
உறங்குகிறார் அவர்!

இவர்கள்
சிதைத்தவர்கள் – தம்
இளமையின்
கனவுகளையும் தான்
ஆதலால், இவர்கள்
புதைக்கப்படவில்லை
விதைக்கப்பட்டவர்கள்!

தங்கத் தலைவன்
தலைமையில் – நாளை
மலரும் தேசம்
காசினியில்
காவியநாயகர்
புகழ் கூறும்.

-க.ரவிச்செல்வன்,
சுண்டுக்குளி.

## இவர் தியாக உச்சிப்படி

*பல்லவி*

வெந்து வெந் தீழ மண்
மீட்சிக்கு வித்தானார் மாவீரரே - பலம்
தந்துதந் தெங்களிற் சந்நதம் சேர்த்தனர் மாவீரரே!

*அனுபல்லவி*

செய்து முடி இன்றேல் செத்து மடி - என்ற
தீரம்மா வீரர்க்கே அத்துபடி
செய்தும் முடித்தார்கள் செத்தபடி - இந்தத்
திண்மை இவர் தியாக உச்சிப்படி!

*சரணம்*

இருட்டினில் கோடி வதைகள் பட்டோம்
ஈந்திடும் மாவீர விளக்கும் பெற்றோம்
திரட்டி யுள்ளோம் வெற்றி நூறுபத்தாய் - இவர்
தியாகம் அமைந்தது வீழும் வித்தாய்!

ஆனை செத்தாலும் ஆயிரம் பொன் - தெய்வம்
ஆகியும் மாவீரர் ஆயிரம் பொன்
மோனம் எனும் மொழிகள் மூலம் - எம்முள்
மூட்டுகின்றார் தமிழ் ஈழத் தாகம்!

-ச.வே.பஞ்சாட்சரம்

## ஒலிக்கும் மணி ஓசை

ஒலிக்கும் மணி ஓசை
விழிக்கும் தாயக நேரம்
கார்த்திகை இருபத்தேழு
காத்திருந்து தீபமேற்று.

சாவுகள் எமக்கொரு பாரமில்லை
தாயக கனவுகள் தூரமில்லை
விழிதூங்க மறந்து தாயகம் காண
அணிவகுத்தவர் நாளிது காண்.
மாவீரர் கனவு நனவாகட்டும்

நாளை நமது தேசம் மலரட்டும்
கைகளில் மலரேந்துங்கள்
துயிலகத்தில் தூவியெழுங்கள்.

கார்த்திகை இருபத்தேழு
சபதமெடுப்போம் நாம்
மாவீரர் மூச்சு பேச்சாக
விழித்தெழுவோம் தமிழா.

-பானு.

## எங்கள் இதயத்துடிப்பில் அவர்கள்

*பல்லவி*

தம்மினம் வாழவே தமைக் கொடை செய்தவர்
தமிழ்ப் புலி மாவீரர் – ஈழ
இம் மண்ணை மீட்பதில் இன்னுயிரீந்தவர்
எந் தமிழ் மா வீரர்!

*சரணம்*

பெற்ற தாயிலும் பிறந்த மண் மீது
பற்றுப்பாசம் படைத்த மா வீரர்!
வெற்றிச் செல்வன் விரகுகள் கொண்டு
விரட்டிப் பகைவனை வீழ்த்தவர் அன்று!

ஈழக் காற்றின் அசைவினில் அவர்கள்!
எங்கள் இதயத் துடிப்பினில் அவர்கள்!
ஆழக் கடலின் அலைகளில் அவர்கள்!
அன்னை மண்ணின் அணுக்களில்
அவர்கள்!

வாழப் பிறந்தவர் ஈழவர் என்றே
மடியப் பிறந்தவ ரானமா வீரர்!
ஆளப் பிறந்தவர் ஈழவரென்று
ஆரத் தழுவினர் சாவினை அன்று!

பொன்னெழுத்தன்

# மாவீரர் பதுமலரைச் சூடு!

தமிழ் மண்ணை மீட்டெடுத்துத் தமிழாட்சி நிலை நாட்ட
தம்முயிர் தந்தவர் மாவீரர்!
ஆளப்படும் நிலைமாற்றி ஆளும் நிலைக் குயர்த்தியவர்
ஆண்மைமிகு மாவீரர் தான்!
தமிழ்மானம் காக்கின்ற தமிழ் மண்ணைக் காக்கின்ற
காவல் தெய்வம் மாவீரர் தான்!
மாவீரர் கல்லறைகள் ஒவ்வொன்றும் நாம் வணங்கும்
கோவில்கள் என்றுளத்திற் கொள்!
குனிந்த தலை நிமிர்த்தியின்று நாமும் தமிழரென்று
வாழவைத்தோர் மாவீரர் தான்!
எம் வாழ்வை வளமாக்கத் தம் வாழ்வைத் களத்திழந்த
மாவீரர் பதுமலரைப் பாடு!
பெற்றோரின் உறவொதுக்கித் தமிழரெலாம்
உறவென்று செருக்களத்தில் நின்றவரைப் பாடு!
வீட்டுறவை விட்டு முழு நாட்டையுமே உறவென்ற
மாவீரர் நல்நெஞ்சைப் பாடு!
புவிவாழ்வின் இன்பங்கள் அனைத்தையும் துறந்த நின்ற
மாவீரர் அரும்புகழைப் பாடு!
தம்முடம்பு காற்றோடு கலக்குமென்று அறிந்த பின்னும்
வெடி சுமந்து நடந்தவரைப் பாடு!
பகை முடிக்க வெடிசுமந்து நீளுறக்கத் தமைதிகொள்ளும்
மாவீரர் தியாகமதைப் பாடு!
தம்முடம்பு நீருகும் எனுமுண்மை தெரிந்து கொண்டும்
களம்புகுந்த வீரர் புகழ் பாடு!
நாள் நேரம் இடம் குறித்து வெடிசுமந்து களம் நடந்த
மாவீரர் நெஞ்சாரத்தைப் பாடு!
ஆண்டினிலே ஒருவாரம் மாவீரர் புகழ்பாடிப்
போற்றி செய்தால் போதுமா சொல்!
தினந்தோறும் மாவீரர் வீரத்தைத் தியாகத்தைப்
போற்றுவதே எங்கள் கடன்!!

– முருகு –

# சாவு வாழ்கிறது

சாவு வாழ்வின் முடிவென்றுதான்
பலபேரின் கணிப்பு
ஈழத்தில் மட்டும் அப்படியல்ல
இவர்களின் சாவில்தான்
எம் இனத்தின் வாழ்வே தொடங்கியது.
சாவும் ஒரு வாழ்வுதான் - என
வாழ்ந்து வழிகாட்டிவிட்டுப்போன உத்தமர்கள்
நாம் வாழ வேண்டும் என்பதற்காக
எம் உயிர்வாழ தம் உயிர் கொடுத்த வீரபுருஷர்கள்
எம் கண்கள்...
இவர்களுக்காக மட்டுந்தான் அழுவதுண்டு.
எம் கைகள்...
இவர்களுக்காக மட்டுந்தான் கை கூப்பித் தொழுவதுண்டு.

ஈவிரக்கமேயில்லாத...
கல்நெஞ்சம் கொண்ட காட்டுமிராண்டி
துச்சாதன சிங்கப்படைகளை அழித்து எம் மண்ணையும்
எம்மையும்
மீட்டெடுத்த மீட்பர்கள்
மரணத்தையே வென்ற சிரஞ்சீவிகள்.
உங்களது பிறப்புக்கு அர்த்தம் உள்ளதைப் போல
இறப்புக்கும் ஒரு அர்த்தத்தை
தேடிக்கொடுத்து விட்டுப்போன காலச் சக்கரம் நீங்கள்.
சாவுக்குள் வாழ்வைத் தேடித்தந்த உங்களைத்தான்
நாம் கல்லறை சென்று வழிபடுகிறோம்.
கல்லறைகள் தான்
எம் நெஞ்சறைக் கோயிலின் கருவறைகள்.
கருவறைகள் எம்மோடு பேசுகின்ற இந்த நாளில் சபதமெடுப்போம்
எந்த இலட்சியத்துக்காக மடிந்தீரோ
அந்த இலட்சியத்தை நனவாக்கி
எங்கள் சபதம் முடிப்போம்
இது உறுதி...

யோ.யூட் நிமலன்
காந்தரூபன் அறிவுச்சோலை.

## நீங்கள் மரணித்தவர்களல்ல

நீங்கள் மரணித்தவர்களல்ல...
வல்ல தலைவன் எண்ண அலைதனிலே
வேங்கைப் புலியாகி எம் நெஞ்சில்
வீரக் கனவோடு நின்று சிரிப்பவரே...
நீளும் துயில் கல்லறையில் நின்று - இன்று
உங்களுக்கு மாலை போட்டு மகிழுகின்றோம்.
நீங்கள் மரணித்தவர்களல்ல...
என்றும் புன்னகையாக நெஞ்சறையில்
வாழ்பவர்களானதால் நின்றபடி - நாம்
இன்று மாவீரர் கீதமுடன் வாழ்த்துப் "பா" பாடுகின்றோம்.
வரலாறாய் ஆன உங்கள் பக்கங்களில் நின்று கலங்குகின்றோம்.
இந்நாளில் தான் ஆயிரமாய் நீங்களும் நாங்களும் மகிழ்வாய்.

க.சசிமாலா,
முரசுமோட்டை

## வணக்கத்துக்குரியவை இவைகள்

நாளைய பொழுதுகளில்
எகிப்தின் பிரமிட்டுக்களல்ல
ஆம்...!
நாளைய ஈழவிடியலுக்காய்
இன்று ஒளி வீசிச்செல்லும்
விண்மீன்களின்
வழித்தடம்!
ஓ...!
காலம் எமக்குத்தந்த
தமிழீழத்தின் - புதிய
காவற் தெய்வங்களின்
கருவறைச் சிற்பங்கள்
வணக்கத்துக்குரியனவாய்...

க.ஆர்வலன்

## தெய்வீகத் தோன்றல்களே மாவீரர்

மாவீரர் காவியாஞ்சலி

தெய்வீகத் தோன்றல்களே மாவீரர்
தேசத்தின் மீட்புக்கா யுயிரை நீத்தார்.
தெய்வத்தின் மறுபிறப்பா யுருவெடுத்து
தேசியத் தலைவனுக்கு உரங்கொடுத்தோர்.
பாசத்தின் பற்றறுத்தோர் மாவீரர்
பாரபுகழ் சாதனைகள் படைத்து நின்றார்.
தேசுறையும் நாடொன்றைப் படைத்திடவே
தேவராய் உருவெடுத்து மானங்காத்தார்.
சிங்களத்தைக் கலக்கியவர் மாவீரர்
சீறிச்சினங் கொண்டெழுந்து பகையைச் சாய்த்தார்.
வெங்களத்துக் கயவர்களை மோதி வீழ்த்தி
வெற்றிகளைக் குவித்துவிட்டுத் தேவரானார்.
சாதிமத பேதங்கள் தகர்த்தெறிந்தார்
சமதர்மக் கோட்பாட்டை வளர்த்தெடுத்தார்.
ஆசையுடன் அணைத்திடவே ஏங்கியோரை
அலட்சியமாய்க் கலங்கவைத்துத் தியாகியானார்.
தேசியத் தலைவனடி பரவிநின்றார்
தெள்ளுதமிழ்க் குரிமைபெற மோதிவென்றார்.
ஐதீகக் கொள்கைகளை யுதறித் தள்ளி
ஐக்கியத்தைப் பேணியெமைக் காத்து நின்றார்.
சிங்களத்தார் வல்லரசார் இணைந்தே யொன்றாய்
சீறியெழும் புலிகளையே யழிக்க வந்தார்.
அங்கங்கள் சிதறியுயிர் பிரிய வைத்தார்
அண்ணன் சொல் ஆணையினால் ஈழங்காத்தார்.
நெய்யூற்றி யகல்விளக்கி லொளியுமேற்றி
நேரிலவர் துயிலுமில்லம் விரைந்து செல்வோம்.
மெய் அயரக் கண்ணீரில் அவருருவம்
மேன்மையுற ஜொலிப்பதனைக் காண்போமங்கே...

மாரீசன்

## துயிலும் இல்லங்கள்

வெடிகளாய்
வெடித்தவர்கள்!
இடிகளாய்
இடித்தவர்கள்!

கன்னியமாய் வாழ்ந்தவர்கள்
கன்னி வெடிகளாய் ஆனவர்கள்!
கண்கள் கண்ட தெய்வங்கள்
கண்மூடிக் காக்கும் கடவுள்கள்!

தேசம் காத்து
தேசியம் காத்து...
தேவ குழந்தைகளாய்
உலவியவர் உறங்கிடும் கோயில் இது!

மரணத்தை
மார்பிலணிந்து
மலர்போல வாழ்ந்த
மறவர் இவர் -

சீறிவரும் சன்னத்தின் முன்
சிறுத்தை எனப் பாய்ந்தவர்கள்
கறுப்பு எழுத்துக்குள் அடக்கமுடியாத
நெருப்பு மனிதர்கள்!

குளிர்ந்த அருவிகள் - நாம்
கும்பிடும் தெய்வங்கள் - இங்கே
இருப்பது கல்லறைகள் அல்ல
கருவறைகள்!

ஓயாத அலைகளாய்
ஒருகாலத்தில் வீசியவர்கள்!
இது சுடுகாடும் அல்ல
இடுகாடும் அல்ல...

சுதந்திர
தமிழீழத்தின்
சுவர்க்கம்
இது!

தீய்க்குள்
தென்றலாய் கசிந்தவர்கள்!
காற்றின் கை பிடித்தேறி
கயவனின் கழுத்தறுத்தவர்கள்!
சுதந்திரப் பேச்சுக்கும்
சுவாசிக்கும் மூச்சுக்கும்
சுடுகுழல் ஏந்தி
சுற்றம் காத்தவர்கள்!

ஆயுத எழுத்துக்களாகி
தமிழீழம் எனும்
காவியம் ஆக்கி
கண்மூடிப் போனவர்கள்

எங்களின் தேசத்து
புல்லுக்கும் புலிக்குணம் உண்டு
காற்றுக்கும் சுதந்திர
தாகம் உண்டென உணர்த்தியவர்கள்!

தண்ணீருக்குள்
தீயானவர்கள்!
சாவிலும் சாதனை படைத்ததற்கு
சான்று இந்த சமாதிகள்!

இது சுடுகாடும் அல்ல
இடுகாடும் அல்ல
தேவ குழந்தைகள்
துயிலும் இல்லங்கள்.

எஸ். அனுராஜ் -
வண்ணார்பண்ணை.


இன்று தமிழீழ தேசியத் தொலைக்காட்சியில் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன் அவர்களின் மாவீரர் நாள் உரை நேரடியாக
ஒளிபரப்பப்படுகிறது.
மாவீரர் நாள்
நவம்பர் 27 2005
த தே தொ
NTT
இன்று பிற்பகல் 5.32 மணிக்கு தேசியத் தலைவரின்
மாவீரர் நாள் உரை நேரடி ஒளிபரப்பு
இன்று நேரடி ஒளிபரப்பு நேரம் மாலை 5 மணி - 7.30 வரை
அலை வரிசை FR 11506 - SR 2.894
FEC 3/4 POLARITY VERTICAI

கார்த்திகைத் திங்கள்
இருபத்தி ஏழு
கண்களில் நீர்த்துளி
உதிர்வதைப் பாரு.

மாவீரர்கள் கல்லறை
புதுமையைக் கேளு.
புது மலர்கள் தூவியே
பூசைகள் செய்து.

பூக்களின் வாசனை
தமிழ்த் தாயகம் கண்டே
வெற்றியின் மாலைகள்
சூட்டிய வீரர்கள்.

விளக்கின் ஒளியாய்
திகழ்ந்திட்ட போதும்
தியாகத்தின் ஒளியே
மாவீரர்கள் யாகம்.

தேச விடுதலைக்காய் தம் உயிரைத் துறந்த
மாவீரத் தியாகிகளுக்கு எம் இதயபூர்வமான அஞ்சலிகள்

திருநெல்வேலி வர்த்தக சங்கமும்
இந்து வாலிபர் சங்கமும்.

ஈழம் பிறப்பதற்காய் நீங்கள்
எவ்வளவைச் சுமந்தீர்கள் ....
ஈழத்தைப் பாதுகாத்தீர்
பாதணிகளே இல்லாமல்.
விழுப்புண்ணடைந்தும் - ஈழத்தை
விழிமூடாது காத்தீர்.

எரிக்கஸ்ரோஷ்
564,566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மாவீரச் செல்வங்களே!
தமிழ் மண் காக்கப் புறப்பட்ட தங்கங்களே!
தாயகம் என்பதே உங்கள் தாரகம்.
தமிழ் என்பதே உங்கள் உயிர்.
சுதந்திரம் என்பதே உங்களினதும்
எங்களினதும் மூச்சு.
முடிந்தவரை முயலுவோம்
உங்கள் பாதச் சுவடுகள்
தொடர....

யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்
யாழ்ப்பாணம்.

எம்மையும் எம் தேசத்தின் விடுதலையையும் நேசித்து வீரசுவர்க்கம் அடைந்த எம் மண்ணின் புனிதர்களான மாவீரர் கனவு நனவாக ஒன்றுபட்டு உழைத்திடுவோம். விடுதலைப் பாதையில் எம் பணி தொடர்ந்திடும்.

எழுச்சி கொண்ட எந்தவொரு இனமும் வீழ்ச்சி கண்டதாக வரலாறு இல்லை.

-தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.

# வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு)



உடல் உறுதிக்கும்
ஊட்டச் சத்துக்கும்
புதுப் பொலிவுக்கும்
புத்துணர்ச்சிக்கும் அருந்திடுவீர்!



வலிகாமம் வடிசாலையில் நூறு வீதம் பனங்கள்ளிலிருந்து சுத்தமான முறையில் வடித்தெடுக்கப்பட்ட மதுசாரம் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட சாராய வகைகள்....

விகர்

பனஞ்சாராயம்

அதிவிசேட தரத்தில் உயர் சுவையும் கொண்ட இரட்டை வடி மதுசாரம் பயன்படுத்திய

*VSV 99*

இந்தச்சாராய வகைகளின் விற்பனை வருமானத்திலிருந்து மேற்கொள்ளப்படும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள்:


- அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களுக்கான ஓய்வு, மரணக் கொடுப்பனவு வழங்கல்.
- முன்பள்ளி மாணவர்களுக்கான இலவச சத்துணவு வழங்கல்.
- முன்பள்ளி மாணவர் ஆசிரியர்களுக்கான இலவச சீருடைத் துணி வழங்கல்.
- அங்கத்தவர் பணியாளர்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை.
- மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கல்.
- பணியாளர்களுக்கான நலன்புரித் திட்டம்.
- அங்கத்தவர்,பணியாளர், முன்பள்ளி ஆசிரியர், மகளிர் ஆகியோருக்கான பயிற்சி வழங்கல்.

உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவளித்து தாயக பொருளாதார சமூக கலாசார வளர்ச்சிக்கு ஊக்கமளித்திடுவீர்!

சங்கானை வீதி,
மானிப்பாய்.

(C/4850)

வலிகாமம் வடிசாலை (சங்கானை வடிசாலை)
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (மட்டு)



மாவீரர் நாள்
நவம்பர் 27—2005
இன்றைய நாள் வணக்கத்திற்குரிய புனித நாள்
இன்று தமிழீழ தேசம் சுதந்திரத் தாகம் கொண்டு
எழுச்சி கொள்ளும் மகத்தான நாள்
எமது மண்ணின் விடிவிற்காகவும்
எமது மக்களின் விடுதலைக்காகவும்
தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்மினிய
வீரர்களை எமது இதயக் கோவில்களில்
நாம் நெஞ்சுருகி பூசிக்கும் திருநாள்
அன்றைய தமிழர் இராச்சியம்
வீழ்ச்சியடைந்து பல நூறு ஆண்டுகள்
அந்நியருக்கும் அயலவருக்கும்
அடிமைப்பட்டு வாழ்ந்த் தமிழீழ தேசம்
இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது
இன்று எமது தாயகத்தின் பெரு
நிலப்பரப்பில் எமது தன்னாட்சி
நடைபெறுகின்றது.
ஒரு நீண்ட துயரமான கொடூரமான
வரலாற்று இடைவெளியின் பின்பு
மீண்டும் தமிழினத்தின் வீர எழுச்சிச்
சின்னமாக தமிழர் மண்ணிற் புலிக்கொடி
பட்டொளி வீசிப் பறக்கிறது.
இந்த மாபெரும் வரலாற்றுத் திருப்பத்தை
ஏற்படுத்தித் தந்தவர்கள்
எமது மாவீரர்கள் என்பதை நான்
பெருமிதத்துடன் இன்று
கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
(2003ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர் நாளை
முன்னிட்டு தமிழீழ தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன் அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து....)
மாவீரர்களின் கனவான
தமிழீழத்தின் கட்டுமானத்தை
உருவாக்கும் பணியில்....
தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM
தமிழீழ வைப்பகம்
தமிழரின் காப்பகம்